பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 22, திங்கட்கிழமை 05.06.2017 | கதிர் 211

## தியாகி சிவகுமார் வீர வணக்க நாள்



தியாகிசிவகுமாரனின் 43 ஆவது ஆண்டு வீர வணக்க நாள் இன்றாகும்.

விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலச் செயற்பாட்டின் போது இலங்கைப் பொலிஸாரால்

பக்கம் 18 >>>

# ஜி.எஸ்.பி. வரிச்சலுகை மீளளிக்கப்பட்டாலும் இலங்கை தொடர்ந்தும் தீவிர கண்காணிப்பில்

## ஐரோப்பிய யூனியன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 05

**ஏழு வருடங்களின் பின்னர் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை இலங்கைக்கு இப்போது வழங்கப்பட்டிருந்தாலும்கூட, அது இலங்கைக்கு வெற்றுக்காசோலை போல ஒரேயடியாக வழங்கப்படவில்லை. இலங்கையில் மனித உரிமைகள் நிலைவரம், நல்லாட்சி, நல்லிணக்கம், சீர்திருத்தங்கள் ஆகியன குறித்துத் தொடர்ந்து தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படுகின்றது. அதனடிப்படையில் இவ்விடயத்தில் முடிவுகள் எடுக்கப்படும்.**

**- இவ்வாறு ஐரோப்பிய ஆணைக்குழு விவாதத்தில் தெரிவிக்கப்பட்டது.**

ஐரோப்பிய ஒன்றியத்தின் விவாதத்தை சில தினங்களுக்கு முன்னர் ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில், சர்வதேச வர்த்தகம் மற்றும் வர்த்தக ஒப்பந்தங்களுக்கான ஐரோப்பிய ஆணையா

பக்கம் 18 >>>

## இன்று மீளவும் பாடசாலைகள்

கொழும்பு, ஜூன் 05

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தற்காலிகமாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் இன்று முதல் மீளத் திறக்கப்படவுள்ளன.

சப்பிரகமுவ மாகாணத்

பக்கம் 18 >>>

## இனமுறுகலை ஏற்படுத்தினால் கடும் சட்ட நடவடிக்கை பாயும்!

கொழும்பு, ஜூன் 05

இனங்களுக்கு இடையில் இனமுறுகலை ஏற்படுத்துவோர் மீது தாரதம்மியம், பாரபட்சம் பார்க்காமல் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸ் திணைக்களம் அறிவித்திருக்கின்றது.

இனமுறுகலை ஏற்படுத்துவோர் மற்றும் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் குழுவினர் ஆகியோர் மீது அவர்களின் பதவி நிலை, அந்தஸ்து பார்க்காமல் கைது செய்வதிலும் மேற்கொண்டு

பக்கம் 18 >>>

## இனவெறுப்புச் செயற்பாடு: மனித உரிமைகள் ஆணையம் கவலை

கொழும்பு, ஜூன் 05

இலங்கையில் முஸ்லிம்கள் மற்றும் ஏனைய சிறுபான்மை மத பிரிவினருக்கு எதிராக நடத்தப்படும் தாக்குதல்கள் மற்றும் வன்முறைச் செயல்பாடுகள் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு கவலை வெளியிட்டுள்

பக்கம் 18 >>>

## மனித நேய அமைப்புகளை ஒன்றிணைத்து நிவாரணப் பணிகளுக்கு ஐ.நா. ஏற்பாடு

இலங்கையில் உள்ள மனிதாபிமான அமைப்புக்களை இணைத்து வெள்ளப் பெருக்கு மற்றும் மண் சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்கான வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை வதிவிட இணைப்பாளர் உனா மெக்கௌலி தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்தின் உதவியுடன் இதற்கான திட்டத்தின் கீழ் தொடர்ந்தும் நிதி உத



பக்கம் 18 >>>

## சமூக வலைத்தளங்கள் ஊடாக இனமுறுகலை ஏற்படுத்தத் தடை!

### மீறுவோர் மீது சட்டம் பாயும் என அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 05

இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையே விரிசலை ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களில் பொய்யான தகவல்களைப் பரப்பி அவதூறுக் கருத்துக்களை வெளிப்படுத்துவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

பொலிஸ் தலைமையகம் நேற்று விடுத்துள்ள

பக்கம் 18 >>>

### புதிய அரசமைப்புக் குறித்து

## சு.க., கூட்டு எதிரணியுடன் கூட்டமைப்பு விரைவில் பேச்சு


கொழும்பு, ஜூன் 05

அரசமைப்புத் தயாரிப்புப் பணிகள் தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் கூட்டு எதிரணியின் பிரமுகர்களை எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அடுத்த வாரம் சந்திக்கவுள்ளனர்.

இந்த இரண்டு குழுக்களுடனான சந்திப்பை நடத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ள போதிலும்,

பக்கம் 18 >>>

அளப்ப அருணாசலம்



ஞானசாரர் விடயத்தில மட்டும் சட்டம் பின்னடிக்குதே...?

## யாழில் வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டம் நாளை 100 ஆவது நாளில்!

### பெரும் கவனவீர்ப்பு நடவடிக்கைக்கு முஸ்தீபு

யாழ்ப்பாணம், ஜூன் 05

நிரந்தர அரச வேலை வாய்ப்பைக் கோரி வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் யாழ். மாவட்டச் செயலகம் முன்பாக முன்னெடுத்து வரும் போராட்டம் நாளை நூறாவது நாளை எட்டுகிறது.

அதனை நாளை யாழ். மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டமாக முன்னெடுக்க அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

வடமாகாணத்திலுள்ள அனைத்து வேலையற்ற பட்டதாரிகளுக்கும் சாதகமான தீர்வு உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி மத்திய, மாகாண அரசாங்கங்

பக்கம் 18 >>>

## காணாமற்போனோர் தொடர்பில் சட்டமூலம் மேலும் தாமதமாகலாம்

### நாளைய விவாதம் தள்ளிப் போகும் அறிகுறி

யாழ்ப்பாணம், ஜூன் 05

காணாமற்போனோருக்கான அலுவலகம் அமைப்பதற்கான சட்ட மூலம் திருத்தங்களுடன் நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது என்று கூறப்பட்டாலும், அது சில சமயம் ஒத்திவைக்கப்படலாம் என நேற்றுப் பிந்திக் கிடைத்த செய்தி

பக்கம் 18 >>>



லண்டனில் நேற்று அதிகாலை மீண்டும் ஒரு பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 7 பேர் உயிரிழந்தனர்; 48 பேர் காயமடைந்தனர். தாக்குதல் நடத்தியோர் எனக்கருதப்படும் மூவரும் பொலிஸாரால் கொல்லப்பட்டனர். (விரிவான செய்தி 15 ஆம் பக்கத்தில்)

## தமிழக மீனவரின் 42 படகுகளை விடுவிப்பதற்கு இலங்கை இணக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 05

இந்திய மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்த 42 படகுகளை முதற்கட்டமாக விடுவிக்க இலங்கை அரசு இணக்கம் தெரிவித்துள்ளது என மீன்பிடித்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடித் தொழிலில்

பக்கம் 18 >>>

THE SASIKA DRIVING SCHOOL DS NO -882



திறப்பு விழா

05.06.2017 இன்று திங்கட்கிழமை 12 மணிக்கு

சசிகா லேணர்ஸ்

மற்றுமோர் கிளை

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

இல -- 821 C, மணிக்கூட்டுகோபுர வீதி, யாழ்ப்பாணம் (ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை)

021 222 8004

05 - 15 ஆம் திகதி வரை பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு விசேட விலைக் கட்டணம், அன்பளிப்பும் உண்டு.

## ஐ.நா. பொதுச்சபையின் உப தலைவர் பதவி இலங்கையருக்கு



ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 72 ஆவது கூட்டத் தொடருக்கான உப தலைவர் பதவிக்கு இலங்கை சார்பான, ஐ.நாவுக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரொஹான் பெரேரா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி உப தலைவர் பொறுப்பை இலங்கை வகிக்கவுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 72 ஆவது அமர்வு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம்வரைநடைபெறவுள்ளது.

இலங்கை இறுதியாக 2007 ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச் சபையின் 62 ஆவது கூட்டத்தொடரில்உபதலைமைப் பொறுப்பை வகித்திருந்தது.

இதன்பிரகாரம் 72 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை சார்பான உப தலைவராக ஐ.நாவுக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரொஹான் பெரேரா செயற்படவுள்ளார்.

# தேசிய அரசை நீடிப்பது குறித்து ஐ.தே.க.– சு.க. புதிய ஒப்பந்தம்

### மேலதிக நிபந்தனைகள் இருக்கும் எனவும் தகவல்

கொழும்பு, ஜூன் 05

தேசிய அரசின் காலத்தை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்க புதிய நிபந்தனைகளை உள்ளடங்கிய புரிந்துணர்வு உடன்படிக்கையை கைச்சாத்திட ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தீர்மானித்துள்ளன.

இது தொடர்பான ஆரம்ப கட்டப் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேசிய அரசு தொடர்பில் இரண்டு பிரதான கட்சிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துடன் காலாவதியாகின்றது.

எனினும், இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள இணக்கப்பாடுகளில் பெரும்பாலானவை கடந்த இரண்டு வருடங்களில் நடைமுறைப்படுத்த முடியாமல் போயின.

இவ்வாறான விடயங்களை கவனத்தில் கொண்டு எதிர்கால சவால்களை வெல்லக் கூடிய விடயங்கள் பல புதிய புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட உள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் இணைந்த இணக்க அரசின் பயணத்தை மாற்ற சில தரப்பினர் முயற்சித்த போதிலும் 2020ஆம் ஆண்டு வரை அரசை மாற்ற முடியாது.

2020ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசு ஒன்றை அமைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டி



லேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருந்து வருகிறார்.

இதற்காக தற்போது கட்சிக்குள் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.-என்றார்.

(எ)

## நேற்று 96 ஆவது நாளை எட்டியது கேப்பாப்பிலவு மக்கள் போராட்டம்!

கேப்பாபிலவு மக்களின் தொடர் போராட்டம் நேற்று 96 ஆவது நாளை எட்டியுள்ளது.

கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தீர்வின்றிய நிலையில் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இந்தநிலையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா மற்றும் வட மாகாண சபை உறுப் பினர் து.ரவிகரன் ஆகியோர் போராட்டதில் ஈடுபடும் மக்களை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினர்.

2008 ஆம் ஆண்டு சொந்த நிலங்களிலிருந்து வெளியேறிய மக்கள், 2012 ஆம் ஆண்டு கேப்பாபிலவில் மாதிரிக் கிராமங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

மாதிரிக் கிராமங்களில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் பொருளாதார ரீதியாக மிகவும் பாதிப்படைந்துள்ளனர். அத்துடன் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.



2012 ஆம் ஆண்டிலிருந்து சொந்த நிலத்துக்குச் செல்வதற்கான போராட்டத்தை மக்கள் முன்னெடுத்தபோதும், போலி வாக்குறுதிகள் வழங்கப்பட்டு அவை இடை நிறுத்தப்பட்டன.

இந்தநிலையில் தமது காணிகளுக்குள் கால் பதிக்கும் வரை போராட்டத்தை தொடர்ந்துள்ளனர். (எ-81)

## அதிக வெப்பமே மீன்கள் உயிரிழக்கக் காரணம்!

### முல்லை கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் கூறுகிறார்

முல்லைத்தீவு வட்டு வாகல் பாலத்துக்கும் பெருங்கடலுக்கும் இடைப் பட்ட பகுதியில், பெருமளவு மீன்கள் உயிர் இழப்பதற்கு அதிக வெப்பமே காரணம் என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியராசா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அதிகரித்த வெப்பம் காரணமாக நீர் பச்சை நிறமாக மாற்றமடைந்து பெருமளவு மீன்கள் உயிரிழந்தன. இதன் காரணமாக, அந்தப்பகுதியில் மீன்பிடியில் ஈடுபடும் பெருமளவு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

நந்திக் கடல் பெருங் கடலுடன் இணையும் பகுதியிலேயே மீன்களின் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. கடந்த காலங்களில் நந்திக் கடலை ஆழமாக்குங்கள். அப்போது தான் மீன்களின் பெருக்கம் அதிகரிக்கும் என்று மாவட்டச்செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

ஆனால், நந்திக் கடல் ஆழமாக்கல் இதுவரை இடம்பெறவில்லை. இந்நீரேரியில் குறைவான நீர் மட்டம் உள்ளமையும் மீன்களின் உயிரிழப்புக்குக் காரணமாக அமைந்துள்ளது. தற்போது வறட்சியைக் காரணங்காட்டினாலும் கூட நந்திக் கடல் ஆழமாக்கலில்தான் எதிர்கால மீன்பெருக்கம் இடம்பெற வாய்ப்புள்ளது.-என்றார்.

## எழுதுமட்டுவாழில் நேற்று நடைபெற்ற கால்நடை மருத்துவ நடமாடும் சேவை

### வடக்கு மாகாண விவசாய அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்

யாழ்ப்பாணம், ஜூன் 05

வடக்கு கால்நடை அமைச்சின் ஏற்பாட்டில் கால்நடை மருத்துவ நடமாடும் சேவை நேற்று எழுதுமட்டுவாழில் நடைபெற்றது.

எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேச வித்தியாசாலையில் இடம்பெற்ற இந்த நடமாடும் சேவையை வடக்கு கால் நடைத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

யாழ்.மாவட்டத்தில் வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைகளத்தின் 16 வைத்திய நிலையங்கள் மட்டுமே இயங்கி வருகின்றன. கால் நடை வளர்ப்பாளர்கள் இந்த மருத்துவ நிலையங்களுக்குக் கால்நடைகளைக் கொண்டு செல்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனைக் கருத்திற் கொண்டு வடக்கு கால்நடை அமைச்சு கடந்த ஆண்டில் இருந்து கால் நடை மருத்துவ நடமாடும் சேவையை நடத்தி வருகிறது.





இதன்போது பண்ணையாளர்களை நோக்கி வைத்திய சேவைகள் நகர்கின்றமையால் கூடுதலான பண்ணையாளர்கள் பயன்பெற்று வருகின்றனர். இதன் ஒரு கட்டமாகவே மீள்குடியேற்றப்பட்ட பிரதேசமான எழுது மட்டுவாழில் கால் நடை மருத்துவ நடமாடும் சேவை நேற்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது கால்நடைகளுக்கான மருந்துகள், கனியுப்புக்கலவைகள் பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. நாய்களுக்கான கருத்தடை சிகிச்சைகள் அதிகமாக இடம்பெற்றுள்ளன.

கால் நடைவளர்ப்போரின் முறைப்பாடுகளின் அடிப் படையில் வீடுகளுக்குச் சென்று சிகிச்சைகள் வழங்கப்பட்டன. அத்துடன் எழுதுமட்டுவாழில் இயங்கி வரும் பெரியளவிலான பாற்பண்ணையையும் மருத்துவ அதிகாரிகள் குழு சென்று பார்வையிட்டுள்ளது.

இந்தநடமாடும் சேவையின் ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், விவசாய அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் சி.வசீகரன், உதவிப் பணிப்பாளர் வக்சலா அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)

## முல்லை. அரச ஓய்வூதியர் சங்க கட்டடத்துக்கு நேற்று அடிக்கல்!

முல்லைத்தீவு, ஜூன் 05

முல்லைத்தீவு மாவட்டத்தின் அரச ஓய்வூதியர் சங்க கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுக் காலை கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு அருகில் நடைபெற்றது

மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கச் செயலாளர் அ.செல்வரத்தினம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டார்.

இந்நிகழ்வில் கனடா வன்னித் தமிழ்ச் சமூக



கலாசார அமையம், பிரம்டன் தமிழ் மூத்தோர் கழக உறுப்பினர் செல்லையா செல்வக்குமாரன் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் அரச ஓய்வூதியர் சங்க உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-81)

# குடிதண்ணீர் உரிமத்தில் மோசடி: இருவர் நேற்று நையப்புடைப்பு

## தந்திரமாக அழைத்து கவனித்த வர்த்தகர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 05

யாழ். மாவட்டத்திலுள்ள வர்த்தகர்களுக்கு குடிதண்ணீர் விநியோக உரிமம் பெற்றுத்தருகின்றோம் எனக் கூறி பணம் மோசடி செய்தனர் என்ற குற்றச்சாட்டில் பொதுமக்களால் பிடிக்கப்பட்ட இருவர் நையப்புடைக்கப்பட்ட பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணியளவில் நல்லூரில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து அவர்கள் பாதிக்கப்பட்டவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டனர்.

'அக்குவா சேவ்' என்ற பெயரில் போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீரை யாழ். மாவட்டம் முழுவதற்கும் விநியோகம் செய்வதற்கான உரிமத்தை வழங்குபவர்கள் எனக் கூறி இங்குள்ள 30 பேருக்கு மேற்பட்டோரிடம் இவர்கள் பணத்தைப் பெற்றுக்கொண்டனர்.

பணம் பெறப்பட்டோரில் சிலருக்குவழங்கப்பட்ட குடிதண்ணீர் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக இல்லை எனக் கூறி நுகர்வோர் அதிகார சபையால் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் அந்த நிறுவனத்துடன் அவர்கள் தொடர்புகொண்ட போது அங்குள்ளவர்களால் அச்சுறுத்தப்பட்டனர் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், அமைதியாக இருந்த அவர்கள் தமக்குள் ஒன்றுகூடி எடுத்த தீர்மானத்திற்கு அமைவாகப் புதிய விநியோகஸ்தர் உரிமம் பெறுவது போன்று அவர்களுடன் உரையாடி நல்லூரில் உள்ள விடுதி ஒன்றுக்கு அழைத்தனர். அங்கு வருகைதந்த அவர்களை மடக்கிப் பிடித்து நையப்புடைத்த பின்னர் பொலிஸாரிடம் கையளித்தனர்.

யாழ். மாவட்டத்தில் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்படி தண்ணீர் தயாரிப்பு நிறுவனம் இவ்வாறு விநியோகஸ்தர் உரிமம் வழங்குவதாகக் கூறி ஏமாற்றி வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த நிறுவனம் யாழ். மாவட்டத்தில் மட்டும் சுமார் 3 தொடக்கம் 4 கோடி ரூபாய் பணத்தை மோசடி செய்துள்ளது எனப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (ம)

# இரு சந்தேக நபர்கள் ஆயுதத்துடன் கைது

கொழும்பு, ஜூன் 5

நாட்டில் இடம்பெற்ற பல்வேறு கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் தேடப்பட்டு வந்த இருவர் ஜா எல ஏக்கல பகுதியில் வைத்து ரி. 56 ரக துப்பாக்கியுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் கொஸ்கொட மற்றும் மீட்டியாகொட பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்களிடம் இருந்து ஒரு துப்பாக்கியும் அதற்கான ரவைகளும் மீட்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம)

# வெளிநாட்டுத் தூதுவர்கள் மூவர் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள்

வெளிநாடுகளில் பணியாற்றுகின்ற இலங்கையின் மூன்று தூதுவர்கள் இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் என்று வெளிவிவகார அமைச்சு கண்டறிந்துள்ளது.

பங்களாதேஷ், பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள இலங்கைத் தூதுவர்களே இரட்டைக் குடியுரிமையைக் கொண்டவர்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது.

பங்களாதேஷுக்கான தூதுவராகப் பணியாற்றிவரும் வை. கே.குணசேகர, பிரித்தானியா மற்றும் இலங்கைக் குடியுரிமை கொண்டவர். பிரான்ஸுக்கான தூதுவராகப் பணியாற்றும் திலக் ரணவிராஜா அமெரிக்க குடியுரிமையைக் கொண்டுள்ளவர்.

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கொன்சூல் ஜெனரலாகப் பணியாற்றும் சுவர்ணா குணரத்ன கனேடிய குடியுரிமையையும் கொண்டவர். பிரான்ஸுக்கான புதிய தூதுவராகப் பிரேரிக்கப்பட்டுள்ள, புத்தி அதாவுடவும் அமெரிக்கக் குடியுரிமை கொண்டுள்ளவராவார்.

அதேவேளை, இராஜதந்திரப் பதவிகளில் ஏனைய தரங்களில் உள்ள அதிகாரிகளிலும் பலர் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் இருப்பது தெரியவந்துள்ளது. நியூயோர்க்கில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் மின்ஸ்டர் கவுன்சிலராக உள்ள சோனாலி சமரசிங்க அமெரிக்க குடியுரிமை கொண்டுள்ளவரா வார்.

பிரித்தானிய குடியுரிமை கொண்ட மனோஜ் வர்ணபால லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில், கவுன்சிலராகப் பணியாற்றுகிறார். லண்டனில் உள்ள தூதரகத்தில் மூன்றாவது செயலராகப் பணியாற்றும் எஸ். என்.குரே பிரித்தானிய குடியுரிமையைக் கொண்டுள்ளவராவார்.

அவுஸ்ரேலியக் குடியுரிமை பெற்றவரான பாலசூரிய, ஜோர்தானில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் இரண்டாவது செயலராகப் பணியாற்றுகிறார் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. (ம)

# பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு விசேட உளவியல் ஆலோசனை

## அமைச்சர் அகிலவிராஜ் நடவடிக்கை

நாட்டின் தென்பகுதியில் இடம்பெற்ற திடீர் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு விசேட உளவியல் ஆலோசனைகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள் மற்றும் குடும்பத்தவர்களையும் சொத்துக்களையும் இழந்து பாதிக்கப்பட்டுள்ள பாடசாலை மாணவர்களின் உளவளத்தை மீண்டும் பலப்படுத்தி சமூக மயப்படுத்துவது இதன் நோக்கமாகும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போது நாட்டின் ஏனைய பாடசாலைகளில் பணிபுரியும் உளவியல் ஆலோசக ஆசிரியர்களினதும் சம்பந்தப்பட்ட ஏனைய தரப்புக்களினதும் ஆதரவும் இதற்காகப் பெற்றுக் கொள்ளப்படும். – என அமைச்சர் மேலும் கூறினார். (ம)

# காலியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழீழ விடுதலை இயக்கம் உதவி

## செல்வம் அடைக்கலநாதன் தகவல்





இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட காலி மாவட்டத்திற்கு நேற்றுச் சென்ற தமிழீழ விடுதலை இயக்கம் அங்குள்ள மக்களுக்கு உதவிகளை வழங்கியது என அக்கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

காலி மாவட்டத்தின் பத்தேகம பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பணிக்காக நாம் சென்றிருந்தோம். இதில் சிவன் அறக்கட்டளையும் பங்கேற்றது.

வடக்கில் இருந்து வந்தோரும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மாணவர்களுமாக 85 பேருக்கு மேற்பட்டவர்கள் இணைந்து நிவாரணப் பணிகளை மேற்கொண்டோம்.

நிவாரணப் பணிகளில் என்னுடன் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் கொள்கை பரப்புச் செயலாளர் கணேஸ் வேலாயுதம், வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தென் மாகாணசபை உறுப்பினருமான வணக்கத்துக்குரிய பத்தேகம சுமித்திர தேரர் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இங்கு பல வீடுகள் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தன. இருந்தபோதிலும் இரு வீடுகளுக்கு மாத்திரமே தற்காலிக கூடாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் உரியவர்களை தொடர்புகொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்திருந்தேன்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக வணக்கத்துக்குரிய பத்தேகம சுமித்திர தேரரிடம் சிவன் அறக்கட்டளையின் சார்பில் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான காசோலையும் வழங்கப்பட்டது. வடக்கிலிருந்து வந்த குழுவினர் நாளையும் (இன்று) தங்கியிருந்து நிவாரணப்பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

அத்துடன் களுத்துறை மாவட்டத்தில் உள்ள புலத்சிங்கள பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கும் சிவன் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் நிவாரணப்பொருள்கள் வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்ட 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய நிவாரணப்பொதிகளும் வழங்கப்பட்டன. – என்றார். (ம)

# யாழ். இந்து சாரணர்களின் சுற்றுச்சூழல் நிகழ்வு

யாழ். இந்துக் கல்லூரி சாரணர்களால் வருடாந்தம் முன்னெடுக்கப்பட்டுவரும் உலக சுற்றுச் சூழல் தினம் இம்முறையும் பாடசாலைக் கணினி விரிவுரை மண்டபத்தில் இன்று காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

"இயற்கையோடு இசைவுற இணைவோம்" எனும் தொனிப் பொருளில் இடம்பெறும் இந்நிகழ்வுக்கு யாழ். பல்கலைக் கழக விவசாய உயிரியல் துறைத் தலைவர் கலாநிதி கு.திருக்குமரன் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பார்.

# சம்பியன் கிண்ணம்: இந்தியாவிடம் தோற்றது பாக்.!





பேர்மிங்ஹாம், ஜூன் 05

சம்பியன்ஸ் கிண்ணத்துக்காக கிரிக்கெட்டின் தாயகமான லண்டனில் நடைபெறும் சுற்றுப் போட்டியில் நேற்றைய 'பி' பிரிவு ஆட்டத்தில் இந்தியா தனது அயலகக் கிரிக்கெட் வைரியர்ன பாகிஸ்தானை 124 ஓட்ட வித்தியாசத்தில் வென்றது.

இந்தச் சுற்றுப் போட்டித் தொடரின் 4 ஆவது ஆட்டம் இது. பெர்மிங்ஹாம், எட்ஜ்பாஸ்டன் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய பாகிஸ்தான் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா வழங்கப்பட்ட 48 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 319 ஓட்டங்களைப் பெற்றது. ரோஹித் சர்மா 91, கோஹ்லி ஆட்டமிழக்காமல் 81, தவான் 68, யுவராஜ் சிங் 53, பண்டயா ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு பாகிஸ்தான் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய சமயம் மழை குறுக்கிட்டு ஆட்டம் நிறுத்தப்பட்டது. அதனால் பாகிஸ்தான் வெற்றிக்கான இலக்கு எஞ்சிய நேரத்தின் அடிப்படையில் 41 ஓவர்களில் 289 ஓட்டங்கள் என மீளக் கணக்கிட்டு அறிவிக்கப்பட்டது.

ஆனால், இந்தியப் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாத பாகிஸ்தான் 33.4 ஓவர்களில் 164 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 124 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அஸார் அலி 50, மொஹமட் ஹாபீஸ் 33 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்தியத் தரப்பில் உமேஷ் யாதவ் 3 விக்கெட்டுக்களையும், பண்டயா மற்றும் ஜடேஜா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

ஆட்ட நாயகனாக யுவராஜ் சிங் தெரிவானார். (உ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## சர்வதேசத்தை திருப்திப்படுத்தல்

*"இப்போது இடம்பெறும் தீர்வு முயற்சிகளில் இலங்கைத் தமிழர்கள் தங்களது விசுவாசம் மிக்க பிரதிநிதிகள் மூலம் நீதி, நேர்மையுடன் பங்காற்றி உழைத்தார்கள், உழைக்கின்றார்கள் என்ற அவதானத்தை எமது நாடும், சர்வதேசமும் பெறும் வகையில் நாம் பணியாற்ற வேண்டும்; அதற்கேற்பவே பணியாற்றுகின்றோம்."*

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன்.

இப்பத்தியில் நாம் அடிக்கடி சுட்டிக் காட்டுகின்றமை போல, 'நீதி நிலைநாட்டப்படுவது மட்டுமன்றி, நிலை நாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்' - என்ற வாக்கு யதார்த்தமானதே. அதனையே சம்பந்தன் வேறு வாசகங்களில் குறிப்பிடுகின்றார்.

தீர்வு முயற்சிகளில் தமிழர் தரப்பு நீதி, நேர்மையுடன் பங்குபற்றுவது மட்டுமல்ல, நீதி, நேர்மையுடன் பங்குபற்றுவதுபோல வெளியே காட்டிக்கொள்ளவும் வேண்டும் என்பதைத்தான் அவர் கூற வருகின்றார்.

உரிய அரசியல் அதிகாரங்களைப் பெற்று, தமது வாழ்வியலை, அரசியலை, குடியியலை, பொருளாதார விவகாரங்களை, சமூக அம்சங்களை, கலாசார விடயங்களை, பண்பாட்டுப் பாதுகாப்பை தாங்களே நிர்வகிக்கக்கூடிய வகையிலான ஆட்சியுரிமையை ஈட்டவேண்டும் என்ற தமிழர்களின் விருப்பு - ஆவல் - அபிலாஷை - வேணவா - எதிர்பார்ப்பு - நியாயமானது; அது நீதி, தர்மத்தின் பாற்பட்டது; இந்தத் தீவின் வரலாற்று வேரோட்டத்தில் இருந்து எழுந்தது. அது, இலங்கைத் தமிழ் சமூகத்தின் ஓர் அடிப்படையான மனித உரிமையும் கூட.

இந்தத் தீவின் வடக்கும், கிழக்கும் தமிழ்ப் பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடமாகும். பூர்வீகத் தாயகமாகும்.அங்கு, தமது மண்ணைத் தாமே ஆளுகை செய்து, தமது சமூகத்தைத் தாங்களே பாதுகாத்து, தமது பொருளாதாரத்தைத் தாமே வளப்படுத்தி, தமது பண்பாட்டை தாமே செழுமைப்படுத்தி, வாழும் அதிகாரப் பரவலாக்கலைத் தமிழர்கள் கோரி நிற்கின்றார்கள்.

இந்தச் சமயத்தில் இந்த நியாயத்தை ஈட்டுவதற்கு தமிழருக்கு இருக்கும் ஒரே பலம் சர்வதேச பங்களிப்புத்தான். அதை இலாவகமாக - எமக்கு சார்பானதாக - பயன்படுத்தினாலே தமிழர் தரப்பு உரிய இலக்கை அடைய வாய்ப்புக் கிட்டும்.

அதைக் கவனத்தில் கொண்டுதான் மேற்படி கருத்தை சம்பந்தன் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

தமிழரின் உரிமைப் போராட்ட வரலாற்றில் மிகப் பெரிய அகப் பலமாக உருவெடுத்த விடுதலைப் போராளிகளின் அரசியல், இராணுவக் கட்டமைப்பையும் இழந்து -

வரலாற்று ஓட்டத்தில் இந்தியத் தலையீடு என்ற பெயரில் 80 களில் கிட்டிய புறப்பல ஆதரவையும் துறந்து -

நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு இன்று பிரதான கொழுகொம்புகள் இரண்டு.

ஒன்று - இந்தத் தீவில் ஐக்கியப்பட்ட ஒரு ஜனநாயக சக்தியாகத் தமிழர்கள் எழுந்து நிற்கின்றார்கள் என்ற ஒற்றுமைப் பலம்.

அடுத்தது - எம் பக்கம் உள்ள நியாயத்தின் காரணமாக கிட்டியிருக்கும் சர்வதேச ஆதரவு அல்லது ஈடுபாடு.

முதலாவது விடயமான ஐக்கிய எழுச்சி என்பதன் குறியீடாகத் தமிழர்களின் தலைமைத்துவத்தைப் பெற்றிருக்கும் சம்பந்தன், இரண்டாவது விடயத்தை இலாவகமாகக் கையாள எடுக்கும் ...த்தனத்தின் வெளிப்பாடே மேற்படி கருத்து.

சர்வதேசத்தைக் கையாளும் விவகாரம் மிக நுட்பமானது. ஆழ்ந்து நுணுகிச் செயற்பட வேண்டிய பல அம்சங்களைத் தன்னகத்தே கொண்ட சாமர்த்தியமான இராஜதந்திரம் அது.

தமிழர்களின் நியாயமான உரிமைகளுக்கான ஆயுத போராட்டம் 2009 இல் முறியடிக்கப்பட்ட பின்னர், அவர்களின் உரிமை முழக்கத்தை வெகுசன எழுச்சியாக - ஜனநாயகப் பண்பியல்புகளோடு - வழி நடத்தி வரும் சம்பந்தன், 'சர்வதேசத்தைக் கையாளுதல் ' என்ற இராஜதந்திரத்தை மிகத் தந்திரமாக - சாணக்கியமாக - முன்னெடுத்து வருகின்றார் என்பது தெரிந்தது தான்.

எமது இனச் சிக்கலோடு சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு 'நாம் வன்முறைப் போராட்ட வழிகளை நாடாதவர்கள், ஆயுதப் போராட்டத்தை நிராகரித்தவர்கள், ஜனநாயகப் பண்புகளையே எப்போதும் வரித்தவர்கள். நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளையே வலியுறுத்துபவர்கள், நியாயமான தீர்வுக்கு இயலுமானவரை பொறுப்பைக் காத்தவர்கள், இயன்றளவு விட்டுக் கொடுப்பைச் செய்வதற்கு தயாரானவர்கள் '- என்பவை போன்ற செய்திகளை ...ிடுப்பதன் மூலம் தீர்வு முயற்சியில் கணிசமாய் முன்னேறலாம், பலம் பெறலாம் என்று கருதுபவர் சம்பந்தன்.

"பொறுமை காப்பது கூட மிகக் சக்தி வாய்ந்த இராஜதந்திரம் தான்" - என்று கூறியவர் - கூறுபவர் - சம்பந்தன்.

அவரது இப்போதைய கருத்தையும் அத்தகைய இராஜதந்திரமாகவே கருதலாம்.

*"சர்வதேச நாடுகள் தத்தமது தேசிய, தேச நலன்களை அடிப்படையாக வைத்து நிகழ்த்தும் சதுரங்க ஆட்டத்தின் ஏதோ ஒரு பகுதியாக, அவர்களின் மனிதாபிமான உள்ளுணர்விற்கும், தேச நலன்சார்ந்த முனைப்பிற்கும் இடையில் இருக்கும் ஏதோ ஒரு புள்ளியில் எமது நலனும் பாதுகாக்கப்படலாம். அதற்கான சூழலை நாம்தான் பேணவேண்டும். அதற்காகப் பொறுமை காத்து, சர்வதேச சமூகத்தை அசௌகரியப்படுத்தாமல், நிலைமையைப் பக்குவமாகக் கையாள வேண்டும்."* - சரியாக 5 வருடங்களுக்கு முன்னர் மட்டுநரில் சம்பந்தன் கூறிய இந்த வசனங்கள் இன்றும் மிகப் பொருத்தமாகவே இருக்கின்றன.

# மாணவருக்கு தீங்கு விளைவிக்கும் சிந்தட்டிக் தாள்களில் பாடநூல்கள்!

## விமர்சிக்கிறது சிங்கள ஊடகம்

கொழும்பு, ஜூன் 05

மாணவர்களின் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் சிந்தட்டிக் தாள்களில் பாடநூல்களை அச்சிட்டு கல்விஅமைச்சு விநியோகம் செய்வதாக சிங்கள ஊடகம் ஒன்று விமர்சித்துள்ளது.

இதுதொடர்பில் அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஏழாம் வகுப்பு மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள பூகோளவியல் பாடப் புத்தகத்தின் ஒரு சில பக்கங்கள் சிந்தட்டிக் தாளில் தற்போது அச்சிடப்பட்டுள்ளன.

இவ்வாறாக தற்போது இரண்டு லட்சம் பாட நூல்கள் மாணவர்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மொத்தமாக ஐந்து லட்சம் எண்ணிக்கையில் இவ்வாறான பாடநூல்கள் அச்சிடப்பட்டுள்ளன என்று தெரிய வந்துள்ளது.

பொதுவாக சிந்தட்டிக் தாள்கள் பன்னிரண்டு வயதுக்குக் குறைவான பிள்ளைகளுக்கு பாதகமானவை. அவை சருமம், கண்போன்றவற்றில்பாதிப்பை ஏற்படுத்தக் கூடியன.

எனினும் கல்விஅமைச்சு இது தொடர்பில் அலட்சியமாக இருந்து வருகின்றது - என்றது. (எ)

# அனர்த்தத்தின் பின் நோய்கள் அதிகரிக்கும் வாய்ப்பு அதிகம்

## எச்சரிக்கிறது சுகாதார அமைச்சு

கொழும்பு, ஜூன் 05

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட அனர்த்த நிலை சற்றுத் தணிந்துள்ளபோதிலும், அதன் பின்னர் ஏற்படக்கூடிய நோய்களின் பாதிப்பு அதிகரிக்கும் சந்தர்ப்பம் உள்ளது எனச் சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பில் சுகாதார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அனர்த்தங்களால் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கு உள்ளாகியுள்ளோரின் மருந்துவகைகள் அழிவடைந்திருக்க வாய்ப்புள்ளது. எனவே, அவற்றை பயன்படுத்த வேண்டாம்.

இதேவேளை, இந்தக் காலப் பகுதியில் அதிகளவில் பரவக் கூடிய டெங்குக் காய்ச்சலைத் தடுப்பதற்கும், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எப்போதும், நன்றாகக் கொதிக்கவைத்து ஆறவைத்த நீரை அல்லது போத்தலில் அடைக்கப்பட்ட நீரை மாத்திரம் பருக வேண்டும்.

குழந்தைகளுக்கு, தாய்ப் பால் மாத்திரம் வழங்க வேண்டும். பால்மா கொடுப்பதை முற்றிலும் தவிர்ப்பதோடு, குழந்தைகளுக்கான பால் போத்தல்கள் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

பச்சை மரக்கறி வகைகள் அல்லது இலை வகைகளை உணவாக உட்கொண்டால் வயிற்றோட்டம் மற்றும் வாந்திபேதி போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

அத்துடன், பிரசவத்துக்குத் தயாரான நிலையில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்கள், உடனடியாக வைத்தியசாலைகளில் சேர வேண்டும்.

பிளாஸ்ரிக் மற்றும் பாத்திரங்களை வீசும் போது, நுளம்புகள் பெருகாத வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வெள்ளநீரில், எலிகளின் சிறுநீர் கலந்திருப்பதால், அந்த நீர் உள்ள பகுதிகளில் வசிப்பவர்கள், எலிக் காய்ச்சலுக்கான நுண்ணுயிர்க் கொல்லி (அன்டிபயோட்டிக்ஸ்) மருந்தை ஏற்றிக்கொள்ள வேண்டும்.

அவற்றைத் தவிர, அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்துள்ளவர்களின் மனோநிலை தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படல் வேண்டும். - என்றுள்ளது. (எ)

# அனர்த்தம் குறித்த இடைக்கால அறிக்கை பிரதமரின் செயலாளரிடம் கையளிப்பு!

கொழும்பு, ஜூன் 05

வெள்ளம், மண்சரிவு என்பனவற்றால் ஏற்பட்ட அனர்த்தம் தொடர்பில் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை பிரதமரின் செயலாளர் சமன் ஏக்க நாயக்காவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த இடைக்கால அறிக்கையின் சுருக்கம் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சமன் ஏக்கநாயக்க தொலைபேசி மூலம் அறிவித்துள்ளார் என்று தகவல்திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களதும் மக்களதும் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளக் கட்டியெழுப்பும் நோக்கில் மத்திய வங்கியும் தேசியக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சும் இந்த அறிக்கையைத் தயாரித்துள்ளன.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நிறைவேற்ற வரவு - செலவுத் திட்ட சட்டகத்துக்குள் மேற்கொள்ளக்கூடிய சகல நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறும், மேலதிக நிதியைச் சர்வதேச நிதி நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கான பேச்சுகளை ஆரம்பிக்குமாறும் பிரதமர் அவரது செயலாளருக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

அதற்கமைய சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் என்பனவற்றின் பிரதிநிதிகளுடன் அடுத்த வாரம் பேச்சு நடத்தப்படவுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கடன் வழங்குவதற்காக இருநூறு கோடி ரூபாவை விடுவிக்க திறைசேரி நட வடிக்கை எடுத்துள்ளது. பாதிக்கப்பட்ட பிரதேசங்கள், பாதிக்கப்பட்ட மக்கள் ஆகிய தரப்புக்களின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான குழு ஒன்றும் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எ)

### விலங்கு விசர் நோயால் பாதிக்கப்பட்ட பிராணியின் அறிகுறிகள்

- அசாதாரணமாக ஊளையிடும்.
- நீர், உணவை விழுங்க முடியாதநிலை.
- கண்கள் சிவந்து, வாயிலிருந்து அதிக உமிழ் நீர் வடியும்.
- வால் கீழ் நோக்கி வளைந்திருக்கும்.

கடித்த நாய் 14 நாள்களுக்குள் இறந்துவிடின் அசிரத்தையாக இருந்து விடாதீர்கள்.



தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

### நாளை

06.06.2017
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம் : சுவாதி மு.இ 10.13 வரை
திதி : துவாதசி பி.ப 1.39 வரை

சுபநேரம் : 10.22 - 11.52 வரை
இராகுகாலம் : 2.52 - 4.22 வரை

# உலக சுற்றுச்சூழல் தினம்
# யூன் 5, 2017

## இயற்கையை நாம் அழித்தால்
## இயற்கையால் நாம் அழிவோம்!



**இயற்கையை இரசிப்போம்! இயற்கையைக் கற்போம்!**

**இயற்கையோடு இசைவுற வாழ்வோம்!**

**இயற்கையைப் பாதுகாப்போம்!**

விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி,
உணவு வழங்கல், நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு
வடக்கு மாகாணம்

# அனைத்து வகை வீடமைப்புத் திட்டங்களிலும் கிழக்கு மாகாணம் புறக்கணிக்கப்படுகின்றது!

## குற்றஞ்சாட்டுகிறார் முதலமைச்சர் நஸீர்

ஏறாவூர், ஜூன் 05

கிழக்கு மாகாணம் அனைத்து வகை வீடமைப்புத் திட்டங்களிலும் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டே வருகின்றது.

-இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

'செமட்ட செவன' வீடமைப்புத் திட்டத்தின் கீழ் ஏறாவூர் ஸக்காத் கிராமத்தில் 36 வீடுகளை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விகிதாசாரப்படி இந்த புறக்கணிப்புக்கள் இடம்பெற்றிருக்கின்றமையை, நான் நேரடியாகவே வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாஸவிடமும், மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனிடமும் சுட்டிக் காட்டியிருக்கின்றேன்.

வீடமைப்பு அமைச்சு, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு இவ்வாறு வீடமைப்புத் திட்டங்களை மேற்கொள்கின்ற எந்தப் பிரிவாக இருந்தாலும், வீடமைப்புத் திட்டம் என்று வருகின்றபோது கிழக்கு மாகாணம் புறக்கணிக்கப்பட்டேவந்திருக்கின்றது.



வடக்கு மாகாணத்தில் எத்தனையோ வீடமைப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், கிழக்கு மாகாணத்திலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பலர் வாழ்கின்றனர். அவர்கள் குடியிருக்க ஒரு வீடு கிடைக்காதா என ஏங்குகின்றனர். அவர்களது கனவை நனவாக்க முடியாமல் உள்ளது. இனி வரும் காலங்களில் அமுல்படுத்தப்படவிருக்கின்ற வீடமைப்பு வேலைத் திட்டங்களில், கிழக்கு மாகாணம் புறக்கணிக்கப்படாமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். -என்றார்.

## திருமலையில் விபத்து: இளைஞன் உயிரிழப்பு!



திருகோணமலை, ஜூன் 05

திருகோணமலை - கிண்ணியா பிரதான வீதியில் அமைந்துள்ள கோயிலடி சந்தியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு டிப்பரும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

தம்பலகாமம் சிறாஜ்நகர் பகுதியைச் சேர்ந்த 18 வயதான இளைஞன் ஒருவரே உயிரிழந்தவர் ஆவார்.

விபத்துடன் தொடர்புடைய டிப்பர் வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார் என திருகோணமலைப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## இனக் கலாசாரம் பறிபோகும் வகையில் முஸ்லிம் காங்கிரஸ் செயற்பட மாட்டாது!

### மு.கா. நாடாளுமன்ற உறுப்பினர் மன்சூர் தெரிவிப்பு

சம்மாந்துறை, ஜூன் 05

முஸ்லிம்களின் கலாசாரம், அடிப்படை உரிமைகள் என்பன பறிபோகும் வகையில் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் செயற்படாது.

-இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூர் தெரிவித்தார்.



சமகால அரசியல் மற்றும் கட்சிப் புனரமைப்புச் சம்பந்தமான கலந்துரையாடல் சம்மாந்துறையிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு நடைபெற்றது. இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முஸ்லிம் மக்களுக்குரிய ஒரேயொரு பலம் முஸ்லிம் காங்கிரஸ் ஆகும். ஆனால், அக்கட்சியை சீர்குலைப்பதற்கு பல்வேறு சதி முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றிலிருந்து கட்சியைப் பாதுகாப்பதற்கு அனைவரும் ஒன்றிணையவேண்டும். முஸ் லிம்களின் பிரச்சினைகளை மிகத் தைரியமாக எடுத்துக்கூறும் ஒரேயொரு கட்சி முஸ்லிம் காங்கிரஸ் தான். இந்தக் கட்சி ஒருபோதும் தனது நிதானத்தை இழக்கவில்லை.

எமது நாட்டில் தேசிய அரசியலில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அரசியல் பொறிமுறைக்குள் சிறுபான்மை அரசியலை நிலைப்படுத்த வேண்டும். அரசியல் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும். அதற்கு சிறுபான்மை இனக்கட்சிகளின் அரசியல் பலத்தை இன்னும் ஆழமாக ஸ்திரப்படுத்த வேண்டும். தற்போது முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முஸ்லிம்காங்கிரஸ்சரியானபாதையில் செல்கின்றது. எதிர்வரும் தேர்தல்களில் இந்தக் கட்சிக்கு ஆதரவு வழங்க வேண்டும். கட்சியைப் பலம் வாய்ந்ததாக மாற்றுவதற்கு அனைத்து முஸ்லிம்களும் ஒன்றிணைய வேண்டும். -என்றார். (ச)

## வாழைச்சேனையில் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது!

வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஓட்டமாவடி தேசிய பாடசாலை முன்பாக வைத்து கேரளக் கஞ்சாவுடன்நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு ஒருவர்கைது செய்யப்பட்டார்.

போதை ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ரி.மேனன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட தேடுதலின் போதே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது ஐந்நூறு ரூபா பெறுமதியான கஞ்சாப் பைகள் இருபத்து மூன்றும், ஆயிரத்து ஐந்நூறு ரூபா பெறுமதியான கஞ்சாப் பைகள் ஆறும் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மட்டக்களப்பில் இருந்து தென்னிலங்கைக்கு ஒருகோடி ரூபா நிவாரணப் பொருள்கள்!

### மட்டு. அனர்த்த முகாமைத்துவ பிரிவு அதிகாரி தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 05

வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்ட தென்னிலங்கை மக்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட மக்களால் சேகரிக்கப்பட்ட ஒரு கோடி ரூபாபெறுமதியான நிவாரணப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன என மட்டக்களப்பு மாநகர சபையின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு பொறுப்பதிகாரி விவேகானந்தன் பிரதீபன் பாபு தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



'மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸின் பணிப்புரைக்கமைய மட்டக்களப்பு சிவில் சமூகம் மற்றும் மாநகர சபையுடன் இணைந்து இந்த நிவாரணப் பொருள்களைச் சேகரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அத்துடன், பல்வேறுபட்ட நிறுவனங்களும், வர்த்தக நிலையங்களும் பொருள்உதவிகளைவழங்கின. சேகரிக்கப்பட்ட பொருள்கள் மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. விரைவில் மேற்படி பொருள்கள் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையும்' என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## சிறுமியர் மீதான வன்புணர்வைக் கண்டித்து வாழைச்சேனையில் நேற்றுப் போராட்டம்!

மூதூர் பெரியவெளியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் மூன்று பெண் சிறுமிகள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமையைக் கண்டித்து வாழைச்சேனை கிண்ணையடியில் 'எதிர்கால இளைஞர் முற்போக்குஅமைப்பினால்' நேற்றுஞாயிற்றுக்கிழமை கண்டனப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை- திருகோணமலை பிர தான வீதியில் இடம்பெற்ற இந்தக் கண்டனப்போராட்டத்தில் அறநெறிப் பாடசாலை மாணவர்கள், பொது மக்கள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





இதன்போது 'துள்ளி விளையாடும் சிறுவர்களின் வாழ்வில் எள்ளி நகையாடுகிறீர்களா?', 'சுற்றிலும் அபாயம் முற்றிலும் விழித்திரு', 'வன்புணர்வுக்கான தண்டனை மரணம் மட்டுமே', 'பாலியல் குற்றத்துக்கான தண்டனைகள் கடுமையாக்கப்பட வேண்டும்' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

இதேவேளை, சிறுவர்களைத் துஷ்பிரயோகச் சம்பவங்களிலிருந்து பாதுகாக்கக் கோரியும், துஷ்பிரயோகச் சம்பவங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான தண்டனையை அமுல்படுத்துமாறு வலியுறுத்தியும் மண்முனைப் பற்றுப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட புதுக்குடியிருப்பிலும் கண்டனப் போராட்டம் ஒன்று இடம்பெற்றமைக் குறிப்பிடத்தக்கது. (ச)

# நல்லாட்சி அரசின் வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்ற முடியாது!



அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 05

நல்லாட்சி அரசு பதவிக்கு வரமுன்னர் அளித்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவது என்பது இயலாத காரியம் என்று நீதி, புத்தசாசன அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள வார இதழ் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள நேர்காணலில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிக்கும் தேவை அரசியல்வாதிகளுக்கு மட்டுமன்றி பொதுமக்களுக்கும் இருந்தது.

அதன் காரணமாகவே நல்லாட்சி அரசுக்கு பொதுமக்கள் வாக்களித்தனர்.

அதற்காக நல்லாட்சி அரசு தேர்தல் காலத்தில் வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்ற முடியாது. உலகின் எந்தவொரு நாட்டிலும், எந்தவொரு அரசும் தான் வழங்கிய வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றியது என்று கூறமுடியாது.

இருந்தபோதிலும் 18 ஆவது திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்து 19 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியமை, ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை, சுயாதீன ஆணைக்குழுக்கள் என்று இந்த அரசு ஏராளமான வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளது.

ஆரம்பத்தில் இரண்டு வருடங்களுக்கு மட்டும் இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து நல்லாட்சி அரசை முன்னெடுப்பதாக உத்தேசித்திருந்தாலும் தற்போது இந்த நாடாளுமன்றத்தின் ஆயுள்காலம் வரை (2020 ஆம் ஆண்டு) இந்த அரசு பதவியில் இருக்கும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தனித்து தேர்தல்களில் போட்டியிடுகின்றமை ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமானது. அதன் மூலம் அடுத்த தேர்தலில் தனித்து ஆட்சியைப் பிடிக்கும் அளவுக்கு ஐக்கிய தேசியக்கட்சிக்கு வெற்றி வாய்ப்பு அதிகரிக்கும்.

சரத் பொன்சேகா அமைச்சராக இருந்தாலும் ஒன்றுமே இல்லாத டம்மி அமைச்சர் தான். அவருக்கு எந்தவொரு துறையும் ஒதுக்கப்படவில்லை. ஒரு காலத்தில் என்னிடம் அவர் உள்ளிட்டவர்கள் உதவிகளைப் பெற்றுள்ளார்கள் .

இந்த அரசில் எந்தவொரு அமைச்சரும் அதிகாரம் படைத்த அமைச்சர் அல்லர். அனைவரும் சமமான அதிகாரம் கொண்ட அமைச்சர்களே .- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மைத்திரி - மஹிந்தவை நேரில் சந்திக்க வைப்பதற்கு முயற்சி



கொழும்பு, ஜூன் 05

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் நிலவும் நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரை நேரடியான பேச்சுக்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இரு தலைவர்களும் நேரடியாக சந்தித்து பேச்சு நடத்துவதற்காக இரண்டு தரப்பையும் சேர்ந்த பிரதி நிதிகள் மீண்டும் தமக்குள் பேச்சுகளை ஆரம்பித்துள்ளனர்.

ஏற்கனவே, இந்த இரண்டு அணிகளும் சில முறை சந்தித்து பேச்சுகளை நடத்தியிருந்தமையுடன் பின்னர் தத்தமது தரப்பு பிரதானிகளையும் சந்தித்துக் கலந்தாலோசனை நடத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேர்தலுக்கு முன்னர் சகல பிரச்சினைகளையும் தீர்த்துக் கொண்டு ஒன்றிணைந்து போட்டியிட்டால் பெரிய வெற்றியை பெறமுடியும் என இரண்டு தரப்பினரும் நம்புகின்றார்கள் எனக் கூறப்படுகிறது.

இதனிடையே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஐக்கியப் படுத்தும் பேச்சில் ஈடுபடுமாறு உலகில் பலமிக்க நாடொன்று மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரியுள்ளது என்றும் அரசியல் தரப்புத் தகவல்கள் ஏற்கனவே தெரிவித்தன.

இதன் காரணமாகவே இரு தரப்பும் தற்போது இந்தப் பேச்சுகளை ஆரம்பித்துள்ளன என்றும் கூறப்படுகிறது.

## இரட்டைக் குடியுரிமை கொண்ட இலங்கைத் தூதுவர்கள் விவரம்!

கொழும்பு, ஜூன் 05

வெளிநாடுகளில் பணியாற்றுகின்ற இலங்கையின் மூன்று தூதுவர்கள் இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் என்று வெளிவிவகார அமைச்சு கண்டறிந்துள்ளது.

பங்களாதேஷ், பிரான்ஸ், அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள இலங்கைத் தூதுவர்களே இரட்டைக் குடியுரிமையைக் கொண்டவர்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது.

பங்களாதேஷுக்கான இலங்கைத் தூதுவராகப் பணியாற்றி வரும் வை.கே.குணசேகர, பிரித்தானியா மற்றும் இலங்கைக் குடியுரிமை கொண்டவராவார்.

பிரான்ஸுக்கான இலங்கைத் தூதுவராகப் பணியாற்றும் திலக் ரணவிராஜா அமெரிக்க குடியுரிமையைக் கொண்டுள்ளவர்.

லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் கொன்சூல் ஜெனரலாகப் பணியாற்றும் சுவர்ணா குணரத்ன கனேடிய குடியுரிமையையும் கொண்டவர் என்று தெரிய வந்துள்ளது.

இவர்களில், வை.கே.குணசேகர மாத்திரமே, இலங்கை வெளிவிவகாரச் சேவையில் உள்ளவராவார்.

அதேவேளை, பிரான்ஸுக்கான புதிய தூதுவராக பிரேரிக்கப்பட்டுள்ள புத்தி அதாவுடவும் அமெரிக்க குடியுரிமை கொண்டுள்ளவராவார்.

அதேவேளை, இராஜதந்திரப் பதவிகளில் ஏனைய தரங்களில் உள்ள அதிகாரிகளிலும் பலர் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் இருப்பது தெரிய வந்துள்ளது.

நியூயோர்க்கில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் மினிஸ்டர் கவுன்ஸிலராக உள்ள சோனாலி சமரசிங்க அமெரிக்க குடியுரிமை கொண்டுள்ளவராவார்.

பிரித்தானிய குடியுரிமை கொண்ட மனோஜ் வர்ணபால லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் கவுன்ஸிலராக பணியாற்றுகிறார்.

லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில், மூன்றாவது செயலராகப் பணியாற்றும், எஸ்.என்.குரே, பிரித்தானிய குடியுரிமையைக் கொண்டுள்ளவராவார்.

ஆஸ்திரேலிய குடியுரிமை பெற்றவரான பாலசூரிய, ஜோர்தானில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் இரண்டாவது செயலராக பணியாற்றுகிறார் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

## இலங்கையில் வீடுகளுக்கு குழாய் மூலம் சமையல் எரிவாயு

கொழும்பு, ஜூன் 05

இலங்கையில் வீடுகளுக்கு குழாய் வழியாக சமையல் எரிவாயு விநியோக திட்டத்தை முன்னெடுக்க இந்தியாவை சேர்ந்த 'பெட்ரோநெட்' நிறுவனம் தீர்மானித்துள்ளது.

கைத்தொழில் மற்றும் வணிக விவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் இந்த தகவலைத் தெரிவித்துள்ளார்.

'பெட்ரோநெட்' நிறுவனம் சமையல் எரிவாயுவை உற்பத்தி செய்யும் முன்னணி நிறுவனம் எனவும் அமைச்சு கூறியுள்ளது.

கைத்தொழில் மற்றும் வணிக விவகார அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் 'பெட்ரோநெட்' நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மணிக் ஜாப்போ ஆகியோர் இந்தத் திட்டம் தொடர்பான ஆரம்ப கட்டப்பேச்சுகளை நடத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## மருத்துவ சோதனைகள் முடித்தார் பிரதமர் ரணில்; ட்ரம்ப் அரசின் முக்கிய பிரமுகர்களைச் சந்திக்கிறார்!

கொழும்பு, ஜூன் 05

தனிப்பட்ட விஜயமாக அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மருத்துவ பரிசோதனைகளை முடித்துக் கொண்டுள்ளார்.

இந்த நிலையில், அடுத்த வாரம் அமெரிக்க அதிகாரிகளுடன் அவர் பேச்சுக்களை நடத்துவார் என்று கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 28ஆம் திகதி தனிப்பட்ட விஜயமாக அமெரிக்கா சென்றார்.

மருத்துவ பரிசோதனைகளுக்காகவே அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார் என்று இலங்கை அரசு கூறியிருந்தது.

நியூயோர்க்கில் உள்ள பிரெஸ்பைரேரியன் பல்கலைக்கழக மருத்துவமனையில் அவருக்கான மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மூன்று நாள்கள் மருத்துவமனையில் தங்கியிருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு உடல் முழுமையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த மருத்துவ பரிசோதனை முடிவடைந்துள்ள நிலையில் நியூயோர்க்கில் தங்கியுள்ள பிரதமர் ரணில், ஐ.நா. சமுத்திரங்கள் கருத்தரங்கில் பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

அத்துடன், ட்ரம்ப் அரசின் செல்வாக்கு மிக்க பிரமுகர்களையும் அவர் சந்தித்துப் பேசத் திட்டமிட்டுள்ளார். (க)

# இயற்கை அனர்த்தக்கருவிகள் அனைத்தும் செயலிழந்தன!



அமைச்சர் யாப்பா கூறுகிறார்

இயற்கை அனர்த்தம் தொடர்பாக 2009 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட 70 லட்சம் ரூபா பெறுமதியான கண்காணிப்புக் கருவிகள் அனைத்தும் செயலிழந்து போயுள்ளன என்று அரசு அறிவித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரிய தர்சன யாப்பா, ஊடகம் ஒன்றுக்கு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்தக்கருவிகள், பாதுக்க என்ற இடத்திலேயே களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. எனினும், அவை தற்போது செயலிழந்துள்ளன.

பல கருவிகள் கொள்வனவு செய்யப்பட்ட போதும் அவற்றில் சில கருவிகள் மாத்திரமே பயன்படுத்தக்கூடியனவாக இருந்தன என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# அனர்த்தம் பற்றிய கருத்துக்கள் தவறாகப் பரப்பப்படுகின்றன

## விசனம் தெரிவிக்கின்றார் பிரதி அமைச்சர் அஜித் பெரேரா



கொழும்பு, ஜூன் 05

நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமைகள் தொடர்பாக தவறானதும், குழப்பங்களை ஏற்படுத்தும் வகையிலானதுமான கருத்துக்களையும் சில குழுவினர் பரப்பிவருகின்றனர் என்று பிரதி அமைச்சர் அஜித் பீ. பெரேரா விசனம் தெரிவித்துள்ளார்.

களுத்துறை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அனர்த்தம் காரணமாக அழிந்து போயுள்ள மக்கள் வாழ்க்கையைக்கட்டியெழுப்ப அனைத்துத்தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இதனைவிடுத்து அரசையும் அதன் செயற்பாடுகளையும் விமர்சித்துக் கொண்டிருப்பதால், மக்களது தேவைகளை உணர்ந்து செயற்பட்டுக்கொண்டிருக்கும் எமக்கு அவர்களின் விமர்சனங்கள் பெரும் முட்டுக்கட்டையாக உள்ளன.

பெரிய அனர்த்தத்துக்கு முகம் கொடுத்துள்ள நாம் இதிலிருந்து மீண்டு வருவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதை விடுத்து, சில தவறான வழிகாட்டலின் கீழ் இயங்கும் குழுக்கள் மக்களிடையே குழப்பங்களை ஏற்படுத்தும் கருத்துக்களைக் கூறி வருகின்றனர். - என்றார். (எ)

# லண்டன் தாக்குதல்களில் இலங்கையருக்குப் பாதிப்பில்லை

லண்டனில், நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில், இலங்கையர் எவரும் பாதிக்கப்பட்டமை தொடர்பில் தகவல்கள் கிடைக்கவில்லை என்று இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

தாக்குதல் தொடர்பாக, அமைச்சின் பேச்சாளர் மஹிஷினி கொலன்னே விடுத்துள்ள தகவலில்-

'லண்டனில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களை, இலங்கை கண்டிக்கிறது என்றும். இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்டோரின் குடும்பங்களுக்கு, இலங்கை தனது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, காயமடைந்தோர், விரைவாகக் குணமடையவும் வேண்டுகிறது'' என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## தினசரி ராசி பலன் 05.06.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் வைகாசித் திங்கள் 22 ஆம் நாள் ஏகாதசித்திதி காலை 9.43 மணி வரை. பின்னர் துவாதசி. நட்சத்திரம். சித்திரை மாலை 5.47 மணி வரை. பின்னர் சுவாதி. மரணயோகம் மாலை 5.47 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம் காலை 7.25 மணி முதல் 8.59 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம் காலை 7.25 மணி முதல் 8.59 மணி வரை. சுபநேரம் பகல் 11.53 மணி முதல் 1.24 மணி வரை. இன்று ஏகாதசி விரதம். தவசம் செய்ய வேண்டிய திதி வைகாசி மாத வளர்பிறை துவாதசி பிறந்த நட்சத்திர வழிபாடு: சித்திரை.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. வீணான செலவுகள் உண்டாகும். வியாபாரம் மத்திம லாபத்தைத் தரும்.

**ரிஷபம்:** யோகமான நாள். பணபலம், மனபலம் அதிகரிக்கும். வியாபாரத்தில் அமோகலாபம் கிடைக்கும். வீடு, வாகன வசதிகள் பெருகும். சிலர் தொழில் கிடைத்து வெளிநாடு செல்ல ஆயத்தமாவார்கள்.

**மிதுனம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமடையும். முன்னேற்றமும், வருமானமும் பெருகும்.

**கடகம்:** கவலையான நாள். குடும்பத்தில் தேவையற்ற வாக்கு வாதங்கள் உண்டாகும். உத்தியோகத்தில் வேலைச்சுமை, பொறுப்பு அதிகரிக்கும்.

**சிம்மம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும். வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும்.

**கன்னி:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. பணவருவாய் அதிகரிக்கும். வியாபாரம் துரித முன்னேற்றமடையும்.

**துலாம்:** மகிழ்ச்சியான நாள். வருமானம் வளமாக இருக்கும். சுயதொழிலில் போதிய வருமானம் கிடைக்கும். புதியவாகன வசதி உண்டாகும். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும்.

**விருச்சிகம்:** சலனம் மிகுந்த நாள். மனம் குழம்பிய படி இருக்கும். உறவினர்களுடன் பகைமை உண்டாகும். வியாபாரம் மந்த நிலையில் இருக்கும்.

**தனுசு:** அதிர்ஷ்டமான நாள். தனலாபம் பெருகும். குடும்பவருமானம் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்துகள் கைக்கு வந்துசேரும்.

**மகரம்:** விருத்தியான நாள். வியாபாரம் பன்மடங்கு பெருகும். உத்தியோக மேன்மை உண்டாகும்.

**கும்பம்:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. குடும்பத்தில் பாசமும், நேசமும் நிறைந்திருக்கும். உத்தியோக உயர்வுகள் கிடைக்கும்.

**மீனம்:** யோசனையான நாள். குடும்பத்தில் சிறு சிறுவாக்குவாதங்கள் உண்டாகும். செய்யும் தொழிலில் மற்றவர்களின் இடையூறுகளும், நெருக்கடிகளும் உண்டாகும்.

**சந்திராட்டம நாள்: கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.**

# அதிபர் தரமுயர்வுக்கான நேர்முகத் தேர்வு நாளை

யாழ்ப்பாணம், ஜூன். 05

இலங்கை அதிபர் சேவை தரம் 3 இல் இருந்து தரம் 2 இற்கு பதவி உயர்வு பெறுவதற்கான நேர்முகத் தேர்வு நாளை செவ்வாய்க்கிழமை முதல் பத்தரமுல்லையில் அமைந்துள்ள கல்வி அமைச்சில் இடம் பெறும்.

இந்த நேர்முகத் தேர்வில் கலந்து கொள்வோர் அடையாள அட்டை, பிறப்புச்சான்றிதழ், இலங்கை அதிபர் சேவையின் முதல் நியமனக் கடிதம், முதல் நியமனத்துக்கு ஏற்ப வேலையைப் பொறுப்பேற்ற சம்பளத் திரட்டு (லொக் பதிவு), அதிபர் சேவையில் நியமனத்தை உறுதிப்படுத்திய கடிதம், அதிபர் சேவையில் வினைத்திறண் காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்த அல்லது அதிலிருந்து விலக்களிப்புப் பெற்ற கடிதம், இணைந்த மொழி சித்தியடைந்தமைக்கான பெறுபேற்றுச் சான்றிதழ் அல்லது க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் அல்லது க.பொ.த.உயர்தரம் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் மற்றைய அரச கரும மொழியில் சித்தியடைந்தமைக்கான பெறு பேற்றுச் சான்றிதழ் அல்லது அதிலிருந்து விலக்களிக்கப்பட்ட கடிதம், வலயத்தால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தகவல் அடங்கிய படிவம், தற்போது சேவையாற்றும் பாடசாலை அதிபரிடம் இருந்து பெறப்பட்ட சேவைச் சான்றிதழ் ஆகியனவற்றின் மூலப் பிரதி என்பனவற்றுடன் வலயக்கல்விப் பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட்ட புகைப் படப் பிரதிகளுடன் அவற்றை வெவ்வேறாக இரண்டு கோவைகளில் கோவைப்படுத்தி தயாரித்து எடுத்து வருமாறு கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ச)

# வாசகர் கருத்து மேடை



## சம்பந்தப்பட்டவர்களே! பதில் கூறுங்கள்

கடந்த 31 ஆம் திகதி புதன்கிழமை காரைநகரில் இருந்து புறப்பட்ட அரச - தனியார் பேருந்துகள் இரண்டு ஏட்டிக்குப் போட்டியாக வீதியில் ஓடின எனவும், வீதியால் பயணித்த பாதசாரிகள் பலர் மற்றும் சிறுவாகன (மிதிவண்டி) ஓட்டுநர்களும் மயிரிழையில் உயிர் தப்பினர் எனவும் மறுநாள் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் புலப்படுத்தி நின்றன.

ஏற்கனவே யாழ். குடாநாட்டில் உள்ள வீதிகளில் வாகனங்கள் குறிப்பாக மோட்டார் சைக்கிள்களின் தொகையும் மற்றும் பாதசாரிகள், பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ள நிலையில், வீதி விபத்துக்கள் நடந்தேறி வருவது கண் கூடு.

இந்நிலையில், வீதிகளில் போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலிஸார் அவ்வப்போது கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தாலும், 'தவறு விடுவதற்கான பின்புலம்' சாரதிகளுடன் வலுவாகவே ஊன்றி நிற்கின்றது என்பதைப் பேருந்துகளின் ஓட்டப்போட்டிகளில் இருந்து புரிந்து கொள்ள முடியும்.

பொலிஸாரின் அசமந்தப் போக்கு... சட்டத்தின் இறுக்கம் போதாமை... பணத்தால் எதையும் சமாளிக்கலாம் என்ற பேருந்துச் சாரதிகளின் மனப் பாங்கு... குற்றமிழைப்பவர்களுக்கு அரசியல்வாதிகளின் பக்கச்சார்பான ஆதரவு... போன்ற விடயங்கள் தவறு விடுவதற்கான தன் நம்பிக்கையையும் துணிவையும் கொடுக்கின்றன என்பது துலாம்பரமாகத் தெரிகின்றது.

இதனால், சாரதிகளின் 'வீம்புத்தனம்' பேருந்துக்குள் இருக்கும் பயணிகளின் பாதுகாப்பையும், வீதியில் நடமாடும் பாதசாரிகளின் நலனையும் கருத்திற் கொள்ளாது செயற்படுகின்றது என்று கூறிக்கொள்ளலாம் அல்லவா!

வீதிகளில் பேருந்துகளை வேகமாகச் செலுத்துவது அரச - தனியார் சாரதிகளுக்கிடையில் ஒரு கௌரவப் பிரச்சினையாக இருக்கலாம். அல்லது அதிக வருமானத்தை ஈட்டும் நோக்கில் போட்டி போட்டும் ஓடலாம்.

ஆனால், இவ்வாறான எண்ணங்களின் நிமித்தம், வீதிகளில் வேகமாகப் பேருந்துகள் செல்லும்போது உயிரிழக்கும் பொதுமக்களின் சாவுக்கு யார் பொறுப்பேற்க முன்வருவர்?

அரச - தனியார் பேருந்து சாரதிகளா? அல்லது இழவு வீட்டில் ''எல்லாம் அவன் செயல்...'' என்று வந்தவர்களால் கூறப்படும் ஆறுதல் வார்த்தைகளா...?

சம்பந்தப்பட்டவர்களே! கூறுங்கள் உங்கள் பதில்களை...

கோகுல்வாசன்
கொக்குவில்.

# யுத்த மீறல்: குற்றம் இழைத்தவரே விசாரணையாளர்!

*மொழியாக்கம் - நித்தியபாரதி*



ஹெய்டியில் அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை இராணுவ வீரர் எவ்வித பாலியல் வன்புணர்வுச் சம்பவத்திலும் ஈடுபடவில்லை எனத் தனது தாயார் வீட்டின் தோட்டத்தில் கதிரை ஒன்றில் அமர்ந்தவாறு மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் உறுதிபடத் தெரிவித்தார்.

ஹெய்டியில் 2013 இல் இடம்பெற்ற பாலியல் வன்புணர்வுச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதற்கு மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் அங்கு அனுப்பப்பட்டிருந்தார். இவர் உண்மையில் இந்த விசாரணையை மேற்கொள்வதற்குப் பொருத்தமான ஒருவரல்லர். ஏனெனில் இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின்போது மேற்கொள்ளப்பட்ட பல்வேறு யுத்த மீறல்கள் தொடர்பில் மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் மீதும் குற்றம் சுமத்தப்பட்டது.

பாலியல் வன்புணர்வுச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட நபருடனோ அல்லது அவரை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய மருத்துவப் பணியாளருடனோ டயஸ் ஒருபோதும் கதைக்கவில்லை. ஆனால், இக்குற்றத்தை இழைத்த இலங்கை இராணுவ வீரர் மீதான குற்றச்சாட்டு பொய்யானது என்பதில் டயஸ் மிக உறுதியாக இருந்தார்.

### இது முதல் சம்பவம் அல்ல

இலங்கை இராணுவ வீரர்கள் மீது பாலியல் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட முதலாவது சம்பவம் இதுவல்ல. 134 இலங்கை அமைதி காக்கும் படையினர் ஹெய்டியைச் சேர்ந்த சிறுவர்கள் சிலரை மூன்று ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய சம்பவம் 2007 இல் கண்டறியப்பட்டது. இதில் ஈடுபட்ட 114 இலங்கை இராணுவ வீரர்கள் உடனடியாக அவர்களது சொந்த நாட்டிற்கு அனுப்பப்பட்ட போதிலும் அவர்கள் ஒருபோதும் சிறைகளில் அடைக்கப்படவில்லை.

இந்த அடிப்படை நோக்கில், வெளிநாடுகளில் அமைதி காக்கும் பணிக்காக அனுப்பப்பட்ட இலங்கை இராணுவ வீரர்களால் இழைக்கப்பட்ட பாலியல் மீறல்கள் தொடர்பில் எந்தவோர் இலங்கை இராணுவ வீரருக்கு எதிராகவும் அந்நாட்டு அரசால் தண்டனை விதிக்கப்படவில்லை.

உள் நாட்டு யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் இவ்வாறான பாலியல் மீறல்களில் இலங்கை இராணுவ வீரர்கள் ஈடுபட்டனர். இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இலங்கை இராணுவ வீரர்களால் இழைக்கப்பட்ட பல்வேறு பாலியல் மீறல் சம்பவங்கள், சித்திரவதைகள், பாரிய படுகொலைகள் மற்றும் ஏனைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை இலங்கை அரசு தொடர்ந்தும் மறுத்து வந்துள்ளது.

இவ்வாறான பல்வேறு போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட இலங்கை இராணுவத்தினரை தனது அமைதி காக்கும் படையில் இணைப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை அனுமதியளித்தது. இவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்கு நீதி எட்டப்படாது ஆயிரக்கணக்கான இலங்கை இராணுவத்தினரை ஐ.நா. தனது அமைதி காக்கும் படையில் இணைத்தமையால் உலக நாடுகளிலும் இவ்வாறான குற்றங்களில் இலங்கை இராணுவத்தினர் ஈடுபட்டனர்.

மனித உரிமைக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட இலங்கை போன்ற பல நாடுகளைச் சேர்ந்த இராணுவ வீரர்களை ஐ.நா. தொடர்ந்தும் தனது அமைதி காக்கும் படையில் இணைத்து வருகிறது. இந்த ஆண்டு இதற்காக 8 பில்லியன் டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### ஐ.நா. செயலாளரின் தரப்பில் கூறப்படுவது

பாலியல் வன்புணர்வுச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதற்கான விசாரணையாளராக ஐக்கிய நாடுகள் சபையால் மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் ஏற்றுக்கொள்ளப்பட்டமை தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகம் அன்ரொனியோ குரெரெசின் உதவிப் பேச்சாளர் பர்கான் ஹக்கிடம் வினவிய போது "எதிர்காலத்தில் அமைதி காக்கும் படைக்கு வீரர்களைத் தெரிவு செய்யும் போது தரமானவர்களைத் தெரிவு செய்வது தொடர்பாக ஐ.நா. தற்போது இலங்கை அரசுடன் இணைந்து பணியாற்றுகிறது. ஆகவே, எதிர்காலத்தில் இலங்கையிலிருந்து அனுப்பப்படும் வீரர்கள் தொடர்பாக 2005 இற்குப் பின்னரான தனிப்பட்ட தகவல்கள் மற்றும் அவர்கள் இராணுவத்தில் பணியாற்றும் போது மேற்கொண்ட செயற்பாடுகள் தொடர்பான தகவல்களையும் இலங்கை வழங்கும்" - எனத் தெரிவித்தார்.

"அனைத்துலக மனித உரிமைகள் சட்டம் அல்லது அனைத்துலக மனிதாபிமானச் சட்டத்தை குறித்த வீரர் எந்தவிதத்திலும் மீறவில்லை என்பதை இலங்கை அதிகாரிகள் எழுத்துமூலம் உறுதிப்படுத்துவதுடன் இராணுவ வீரர்கள் தவறிழைக்கும் பட்சத்தில் அவர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் தாம் ஈடுபடமாட்டோம் என்பதையும் அந்த நாட்டு அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும்" - என அவர் தெரிவித்தார்.

"இலங்கை அரசும் தனது வீரர்களைத் தனித் தனியாகப் பரிசீலிக்க வேண்டும். அத்துடன் ஐ.நா. நியமங்கள் மற்றும் பாலியல் மீறல்கள் தொடர்பான மனித உரிமை நன்னெறிகளைப் பாதுகாப்பதற்கான பல்வேறு நியமங்களையும் பின்பற்றுவது தொடர்பாக தனது இராணுவத்தினருக்கு இலங்கை அரசு பயிற்சியளிக்க வேண்டும்" - என பேச்சாளர் ஹக் தெரிவித்தார்.



**ஹெய்டியில் இலங்கை படைகளின் திருவிளையாடல்களை மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் விசாரித்த விநோதம்**

### 2,000 குற்றவாளிகள்

மார்ச் வரையான கடந்த 12 ஆண்டுகளில் ஐ.நா அமைதி காக்கும் பணியில் ஈடுபட்ட இலங்கை இராணுவ வீரர்களுக்கு எதிராக 2 ஆயிரம் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என அசோசியேட்டட் பிரஸ் ஊடகத்தால் கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் கண்டறியப்பட்டது. ஐ.நா. அதிகாரிகள் தமது பழைய கோப்புக்களிலிருந்து பாலியல் மீறல்கள் குறித்த பதிவுகளை மீளவும் பரிசீலித்தால் இந்த எண்ணிக்கை இன்னமும் அதிகமாகலாம்.

கொங்கோவில் இடம்பெற்ற நீண்டகால யுத்தத்தின் போதும் கொங்கோலிய இராணுவத்தினர் பல்வேறு யுத்த மீறல்களில் ஈடுபட்டனர் எனக் குற்றஞ் சுமத்தப்பட்டனர். மத்திய ஆபிரிக்க குடியரசில் சமாதானப் படைகளாகப் பணியாற்றிய இவர்கள் குறைந்தது 17 பாலியல் மீறல் சம்பவங்களில் ஈடுபட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளையில் கொங்கோ நாட்டின் நிலை மிகவும் சிக்கலானதாகும். குறிப்பாக தனது சொந்த நாட்டில் ஏற்பட்டுள்ள மோதலுக்கு முகங்கொடுப்பதற்காக ஐ.நா. அமைதி காக்கும் படையினரின் உதவியை கொங்கோ நாடிய அதேவேளையில் ஏனைய நாடுகளுக்கு தனது படை வீரர்களை அமைதி காக்கும் பணிக்காக அனுப்பி வருகிறது. ஐ.நாவின் முன்னாள் செயலாளர் நாயகம் கோபி அனான் இந்த விடயத்தை நன்றாகப் புரிந்து வைத்திருந்தார்.

ருவாண்டாவில் யுத்தம் இடம்பெற்றபோது அவர்களுக்கு உதவுவதற்கான அமைதி காக்கும் படையினரை அனுப்புவதில் அவர் இடரை எதிர்நோக்கியிருந்தார். ஆனால், இந்த யுத்தத்தில் 800,000 வரையான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். "சில வேளைகளில் ஐ.நாவிற்கு படைகள் தேவைப்படுகின்றன. படையினரை ஏற்றுக் கொள்ளும் போது அவர்கள் மோசமானவர்களாக இருந்தால் அது பெரிய பிரச்சினையாக மாறிவிடுகிறது" - என கோபி அனான் தெரிவித்திருந்தார்.

### ஒன்பது சிறார்களின் சாட்சியங்கள் பதிவு

ஹெய்டியில் இடம்பெற்ற சிறுவர் மீதான தொடர்ச்சியான பாலியல் வன்புணர்வுச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட ஒன்பது சிறார்கள் ஐ.நா. விசாரணையாளர்களிடம் சாட்சியங்களைப் பதிவு செய்திருந்தனர். தமது உணவுப் பசியைத் தீர்ப்பதற்காக முதலில் தாம் பாலியல் வன்புணர்வில் ஈடுபடுத்தப்பட்டனர் எனவும் பின்னர் தாம் ஒவ்வொரு இராணுவ வீரர்களாலும் வன்புணர்விற்கு உட்ப்படுத்தப்பட்டனர் எனவும் பாதிக்கப்பட்ட சிறார்கள் தெரிவித்தனர்.

தனது 12 ஆவது வயதில் தான் முதன் முதலில் அமைதிப் படை வீரர் ஒருவருடன் பாலியல் உறவை வைத்த போது தான் உடலளவில் கூட முதிர்ச்சியடையவில்லை என பாதிக்கப்பட்ட சிறுமி ஒருவர் கூறினார். நாளொன்றுக்கு நான்கு பேர் வீதம் மூன்று ஆண்டுகளில் 100 இற்கும் மேற்பட்ட இலங்கை இராணுவ வீரர்களுடன் தான் உறவில் ஈடுபட்டார் என பிறிதொரு சிறுமி தெரிவித்தார்.



### இலங்கையிலும் பல சம்பவங்கள்

இதுமட்டுமல்லாது இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட உள்நாட்டு யுத்தத்தின் போதும் இவ்வாறான பல்வேறு பாலியல் மீறல் சம்பவங்களில் இலங்கை இராணுவ வீரர்கள் ஈடுபட்டனர் என்பதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. யுத்தம் முடிவடைந்து எட்டு ஆண்டுகள் கடந்த நிலையில் தாம் எவ்வாறு இராணுவ வீரர்களால் சித்திரவதை செய்யப்பட்டோம் மற்றும் கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டோம் என்பது தொடர்பாக இலங்கையில் பாதிக்கப்பட்ட பெண்கள் பலர் தற்போது சாட்சியங்களுடன் கூறுகின்றனர்.

சாதாரண உடைகளுடன் முக மூடிகள் அணிந்த் வண்ணம் வந்த ஆண்கள் சிலர் தன்னைக் கடத்திச் சென்றனர் எனவும் பின்னர் தனது கண்கள் கட்டப்பட்ட நிலையில் தான் கூட்டுப் பாலியல் வன்புணர் விற்கு உட்படுத்தப்பட்டார் எனவும் அது ஓர் இராணுவ முகாம் எனத் தான் கருதுகிறார் எனவும் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பெண் ஒருவர் அசோசியேட்டட் பிரஸ் ஊடகத்திற்கு வாக்கு மூலம் வழங்கியுள்ளார்.

"அவன் எனது உடைகள் அனைத்தையும் களைந்தான், தரையில் விரிக்கப்பட்ட மெத்தையில் என்னைப் பலவந்தமாக அமரவைத்தான். அத்துடன் எனது இரு கைகள் மற்றும் கால்கள் போன்றவற்றை நைலோன் கயிற்றால் மெத்தையின் இரு பாகங்களிலும் பொருத்தப்பட்ட இரும்புக் கம்பியுடன் சேர்த்து இறுகக் கட்டினான். இவ்வாறு நான் இரண்டு மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டு மீண்டும் மீண்டும் பாலியல் வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டேன்" எனக் குறித்த பெண்மணி தெரிவித்தார்.

"எனது அறைக்கு மேலும் நான்கு பெண்கள் கொண்டு வரப்பட்டனர். அப்போது அங்கு வந்த இராணுவ வீரன் ஒருவனிடம் எங்களில் எவரையாவது தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்டான். அவன் என்னைத் தெரிவு செய்து பிறிதொரு அறைக்குள் கொண்டு சென்றான். அங்கு பாலியல் வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டேன்" - எனப் பாதிக்கப்பட்ட இப் பெண் கொடுத்த வாக்குமூலம் மார்ச் மாதம் வெளியிடப்பட்ட அனைத்துலக உண்மை மற்றும் நீதித் திட்டத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### மோசமாக நடந்தனர் இராணுவ அதிகாரிகள்

57 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கை பாலியல் சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட இலங்கையைச் சேர்ந்த 43 பெண்களின் உண்மையான சம்பவங்களை உள்ளடக்கியுள்ளது.

இவ்வாறு தன்னை வன்புணர்விற்கு உட்படுத்திய இலங்கை இராணுவ வீரரை குறித்த பெண் ஒளிப்படம் ஒன்றில் அடையாளம் காண்பித்தார். இந்த இராணுவ வீரர் ஓர் இராணுவ அதிகாரி என்பதுடன் இவர் ஐ.நா. அமைதி காக்கும் படையில் பணிபுரிவதற்காக அனுப்பப்பட்டார் என்பதை அசோசியேட்டட் பிரஸ் உறுதிப்படுத்தியுள்ளது.

குறித்த பாதிக்கப்பட்ட பெண் அச்சம் காரணமாகத் தனது பெயரை வெளியிட வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார். ஆனால், இந்த அறிக்கை தொடர்பாக பதிலளிப்பதற்கு இலங்கை இராணுவத்தினரும் அரசும் மறுத்துவிட்டன. தனது இராணுவத்தினர் பல்வேறு சித்திரவதைகள் மற்றும் பாலியல் மீறல்களில் ஈடுபடுகின்ற போதிலும் இதனை இலங்கை அரசு தொடர்ந்தும் நிராகரித்தே வருகிறது.

*(மிகுதி பின்னர்)*

நன்றி புதினப்பலகை




பொன்.வேணு கிருஷ்ணா

புருசெல்ஸ் கூட்டத்திற்கு முன்பாக, காப்ரியல் SPDயின் (ஜேர்மனியின் சமூக ஜனநாயகக் கட்சி) சான்சலர் வேட்பாளர் மார்டின் ஷுல்ஸ் உடன் சேர்ந்து அமெரிக்க வெளியுறவுக் கொள்கைக்கு எதிராய் ஓர் ஒருங்கிணைந்த தாக்குதலைத் தொடக்கினார். 2024இற்குள்ளாக ஜேர்மனியின் பாதுகாப்புச் செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கையை இருவரும் விமர்சனம் செய்தனர். ''ஜேர்மனியில் இராணுவச் செலவினத்தை இரட்டிப்பாக்கிக் கொள்ள முற்றிலும் எந்த வழியும் இல்லை'' என்று ஒரு நேர்காணலில் தெரிவித்த காப்ரியல், ''நாங்கள் எதில் பணத்தைச் செலவிடுவோம் என்பதெல்லாம் தெரியாது'' என்று மேலும் சேர்த்துக் கொண்டார்.


EXPRESS 7 Nov 2016
HOME NEWS SHOWBIZ & TV SPORT COMMENT FINANCE
Nato puts 300,000 troops on 'HIGH ALERT' amid fears of all out confrontation with Russia
http://www.express.co.uk/news/world/729453/nato-putin-russia-war-troops-military

### ''அமைதியில் முதலீடு செய்யுங்கள்- ஆயுதங்களில் அல்ல''

''அமைதியில் முதலீடு செய்யுங்கள்-ஆயுதங்களில் அல்ல'' என்ற தலைப்பில் Der Spiegel இல் வெளியான ஒரு தலையங்கப் பக்க கட்டுரையில் ஷுல்ஸ், ''நேட்டோவின் 2 சதவீத இலக்காக சொல்லப்படுவது குறித்த விவாதம்'' ஓர் ''அபாயகரமான போக்கை ''வெளிப்படுத்தியதாக எச்சரித்தார். இது ''ஜேர்மனியின் வருடாந்திர பாதுகாப்புச் செலவினத்தை 70பில்லியன்யூரோ எனும் பிரம்மாண்டமான அளவிற்கு இரட்டிப்பாக்குவது



என்று அர்த்தமளிக்கும்.'' அதன்பின் பாசாங்குத்தனத்துடன் அவர் கேட்டார், ''1949 இல் ஜேர்மனியின் ஸ்தாபகத் தந்தைகள் இந்த சித்திரத்தையா தங்கள் முன் கொண்டிருந்தனர்? ஐக்கியப்பட்டதாக, ஐரோப்பாவில் முழுமையாக ஒருங்கிணைந்ததாக, நண்பர்களாலும் கூட்டாளிகளாலும் சூழப்பட்டதாக-மாறாக உடல் முழுக்க ஆயுதம் தரித்ததாகவா?.''

உண்மையில், ஷுல்ஸின் கருத்துக்கும் சமாதானவாதத்திற்கும் சம்பந்தம் ஏதுமில்லை. இராணுவச்செலவினத்தைக் குறைப்பதல்ல அவரது கவலை, மாறாக அமெரிக்காவில் இருந்து ஜேர்மனி சுயாதீனமாக இருப்பதை உறுதிப்படுத்துவதே அவரது அக்கறையாகும். இராணுவக் கொள்கை, வெள்ளை மாளிகையால் உத்தரவிடப்படுவதை அவர் விரும்பவில்லை, மாறாக ஜேர்மனி மற்றும் ஐரோப்பிய இராணுவங்கள் அமெரிக்காவில் இருந்து சுயாதீனப்பட்டும், அதற்கு எதிராகவும் கூட, செயற்படுமளவுக்கு அவற்றை வலுப்படுத்த வேண்டும் என்பதே அவரின் எண்ணமாய் இருக்கிறது.

ஷுல்ஸ் தனது Spiegel Online பின்னூட்டத்தில் ஜேர்மன் இராணுவம் பெரிய அளவில் கட்டியெழுப்பப்படுவதற்கும் வெளிநாட்டில் கூடுதலான இராணுவத் தலையீடுகளில் ஈடுபடுவதற்கும் விண்ணப்பம் வைத்தார். அவர் எழுதினார்: ''வருங்காலத்தில் சர்வதேச சட்டத்திற்கு இணங்கிய தலையீடுகளில் இராணுவம் பங்கேற்கும். அதற்கு நமது படையினர்களுக்கு ஆகச் சிறந்த சாதனங்கள் தேவை.''

அதேநேரத்தில், ஐரோப்பாவின் பாதுகாப்புக் கொள்கை விரிவாக்கம் செய்யப்படுவதற்கும் ஜேர்மனியின் மேலாதிக்கத்தில் ஓர் ஐரோப்பிய இராணுவம் உருவாக்கப்படுவதற்கும் ஷுல்ஸ் கோரினார்: இறுதியில் ஐரோப்பா ''ஐரோப்பிய ஒன்றியத்தின் கூட்டு பாதுகாப்பு மற்றும் தற்காப்பு கொள்கை விடயத்தில் முன்னேற்றம் காணவேண்டியிருக்கிறது. ஐரோப்பிய ஒன்றியத்தில் இதே இலக்கைப் பின்தொடர்ந்து கொண்டிருக்கும் நமது கூட்டர்ளிகளுடன் இணைந்து, ஓர் ஐரோப்பிய பாதுகாப்பு ஒன்றியம் விடயத்தில் உடன்பாடு காண நாங்கள் விரும்புகிறோம். இது விடயத்தில் எப்போதும் முட்டுக்கட்டை போட்டு வந்திருக்கும் பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறி இருப்பது இதற்கு புதிய சந்தர்ப்பங்களை'' வழங்குகிறது.

அமெரிக்காவிடம் இருந்து சுயாதீனப்பட்டும் அதற்கு எதிராகவும் உலகெங்கிலும் ஏகாதிபத்திய நலன்களை பின்பற்றிச் செல்கின்ற ஒரு ஜேர்மானிய மற்றும் ஐரோப்பிய வல்லரசுக் கொள்கைக்கு ஷுல்ஸ் அழைப்பு விடுக்கிறார் என்பது ஐயத்திற்கிடமில்லாததாகும்.

ஐரோப்பிய ஒன்றியம் இறுதியாக ''ஒதுங்கியிருப்பதை விட்டுவிட்டு அமைதிக்கான சர்வதேசக் கொள்கையின் அரங்கில் ஒரு செயலூக்கமான பாத்திரத்தை ஏற்க வேண்டும்'' என்று



அவர் வலியுறுத்தினார். இது ''அசெளகரியமானது'' என்பதுடன் நிச்சயமாக பல்தரப்பட்ட விவாதங்களுக்கும் வழிவகுக்கும். ஆயினும் ''ஐரோப்பாவுக்கான ஒரு கூடுதல் செயலூக்கமான பாத்திரம்'' என்பதற்கு ''எந்த உருப்படியான மாற்றும்'' இல்லை. அவர் மேலும் சேர்த்துக் கொண்டார், ''ஏனென்றால் நமது கூட்டாளிகளாக இருப்பவர்களும் உள்ளிட மற்ற உலகளாவிய அரசியல் செயற்பாட்டாளர்களில் பலருக்கும் அமைதிக்கான இத்தகையதொரு புதிய கொள்கையில்



சுத்தமாய் ஆர்வமில்லாமல் இருக்கிறது அல்லது மிகக் குறைந்த ஆர்வம் தான் இருக்கிறது.''

### ஐரோப்பிய சக்திகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் நடத்தப்பட்டிருந்த சட்ட விரோத மான மூர்க்கத்தன போர்களில் பங்கு பெற்றிருக்கின்றன

ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தை அமெரிக்க இராணுவ வாதத்திற்கான ஒரு சமாதானவாத மாற்றாக முன்வைப்பதற்கு ஜேர்மனியின் சமூக ஜனநாயகக் கட்சியினர் செய்கின்ற முயற்சி ஒரு மோசடியாகும். கடந்த கால்-நூற்றாண்டு காலத்தில், ஐரோப்பிய சக்திகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் நடத்தப்பட்டிருந்த சட்டவிரோதமான மூர்க்கத்தன போர்களில் பங்கு பெற்றிருக்கின்றன என்பதுடன் ஒட்டுமொத்தமாய் பார்த்தால் அமெரிக்க அரசின் தலைமையில் இருக்கும் மல்டிபில்லியனரால் முன்தள்ளப்படுவனவற்றை ஒத்த கொள்கைகளையே இப்போது பின்பற்றிக் கொண்டிருக்கின்றது. அவை ஐரோப்பா முழுமையிலும் சமூகநல செலவுகளை வெட்டிக்கொண்டிருக்கின்றன, இராணுவப் பெருக்கத்தில் ஈடுபட்டுள்ளன, அரசு எந்திரத்தை வலுப்படுத்திக் கொண்டிருக்கின்றன. அவர்களின் அமெரிக்க ''கூட்டாளிக்கு'' எதிராக நடவடிக்கைகள் எடுப்பதற்கும் அவை தயாரிப்பை மேலும் மேலும் அதிகப்படுத்தி வருகின்றன.

இந்த அபாயகரமான அபிவிருத்திக்கான காரணம், உற்பத்தியின் சர்வதேசத் தன்மைக்கும் தேசிய அரசு-அமைப்பு முறைக்கும் இடையிலான முரண்பாட்டை வெல்லும் திறனற்றதாக இருக்கும் முதலாளித்துவத்தின் தீர்க்கமுடியாத நெருக்கடியிலேயே காணத்தக்கதாகும். முதலாம் மற்றும் இரண்டாம் உலகப் போர்களை ஒட்டிய காலத்தில் போலவே, கச்சாப் பொருள்களுக்கும், சந்தைகளுக்கும், செல்வாக்கு வட்டங்களுக்குமாய் ஏகாதிபத்திய சக்திகளுக்கு இடையில் நிலவுகின்ற போட்டியானது, தொழிலாள வர்க்கம் தனது சொந்த சுயாதீனமான சோசலிச வேலைத்திட்டத்தைக் கொண்டு தலையிடாத பட்சத்தில் தவிர்க்கவியலாமல் பெரியதொரு போரில் சென்று முடியக்கூடியதாக இருக்கின்ற கூர்மையான மோதல்களை தூண்டிக் கொண்டிருக்கிறது.

(தொடரும்)



# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




167

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

## பேச்சுகளை இடைநிறுத்த புலிகள் முடிவு

எமது தாயக நிலத்தில் தனது ஆக்கிரமிப்புப் பிடியைத் தளரவிடாது இறுக்கிய இராணுவத்தினரின் மனிதாபிமானமற்ற கடும்போக்கால் அந்த மக்களது மீள்குடியேற்றம் மேலும் சிக்கலடைந்தது. அத்தோடு, போர் நெருக்கடியைத் தணித்து, இயல்பு நிலையைத் தோற்றுவிக்கும் குறிக்கோளுக்கும் சாவு மணி அடிக்கப்பட்டது. அதிகாரமின்றி, நிதியின்றி, நிர்வாகத் திறமையின்றி 'சிரான்' அமைப்பும் செயலிழந்து முடங்கிப் போனது. இதேவேளை, தென்னிலங்கையின் பொருளாதாரத்தைச் சீரமைத்து கட்டியெழுப்புவதற்கு முக்கியத்துவம் கொடுத்து, விக்கிரமசிங்க அரசு உலக நாடுகளிடம் நிதி உதவியை வேண்டி நின்றது. அத்துடன், விடுதலைப்புலிகள் இயக்கத்தில் அரசியல், இராணுவ ரீதியாக முடக்கும் சர்வதேசச் சதிவலைப் பின்னல் என்ற நாசகாரத் திட்டத்தை கட்டியெழுப்புவதிலும் விக்கிரமசிங்கவும் அவரது தோழரான மிலிந்த மொறகொடவும் அமெரிக்காவுடன் இணைந்து அந்தரங்கமாகச் செயற்பட்டனர். இப்படியான ஒரு சூழ்நிலையில் பேச்சுகளை கட்டம் கட்டமாக முன்நகர்த்தி, முதற்கட்டப் பேச்சுகளில் எமது மக்களின் அவசர, மனிதாபிமான வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுத்து தீர்த்து வைக்க வேண்டும் என்ற எமது தந்திரோபாய அணுகுமுறையை விக்கிரமசிங்க அரசு முற்றாக அசட்டையீனம் செய்தது.

இப்படியாக சமாதானப் பேச்சுகள் குறித்து எமது விடுதலை இயக்கத்திலும் மக்கள் மத்தியிலும் ஆழமான விரக்தியும், ஏமாற்றமும், நம்பிக்கையீனமும் வேர்விட்டு வளர்ந்து வந்தவேளையில், விடுதலைப்புலிகள் அமைப்பை ஓரம்கட்டிவிட்டு, 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14, 15 ஆம் திகதிகளில், அமெரிக்காவின் தலைமையில் வொஷிங்டனில் உதவி வழங்கும் நாடுகளின் சர்வதேச மாநாடு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. ஜப்பானில் நடைபெற்ற பேச்சுகளின்போது, இந்த மாநாடு பற்றிய தகவலை மொறகொட எனக்கு முதன் முதலாக தெரிவித்தார். 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கான 'ஒரு பூர்வாங்க சந்திப்பாகவே' வொஷிங்டன் கூட்டம் நடைபெறுவதாக 'அடக்கி வாசிக்க' முயன்றார் மொறகொட. நான் அப்பொழுதே அவரிடம் கடும் ஆட்சேபம் தெரிவித்தமையுடன், உதவி பெறும் சர்வதேச மாநாடுகளில் சிறிலங்கா அரசும் விடுதலைப்புலிகளும் சமத்துவமான பங்காளிகளாகக் கலந்து கொள்ளவேண்டும் என்ற உடன்பாட்டை இது மீறுகின்றது எனச் சுட்டிக்காட்டினேன். விடுதலைப்புலிகளை ஓரம் கட்டும் இந்த நடவடிக்கை, சமாதான முயற்சிக்கு பாரதூரமான பங்கத்தை விளைவிக்கும் என்றும் நான் அவருக்கு எச்சரித்தேன்.

உதவி வழங்கும் நாடுகளின் முக்கிய மாநாடு ஒன்று வொஷிங்டனில் நடைபெறவுள்ளது என்பதையும் தடை செய்யப்பட்ட அமைப்பு என்பதால் எமது பிரதிநிதிகள் அந்த மாநாட்டுக்கு அழைக்கப்படவில்லை என்பதையும் நான் தெரிவித்தபோது, பிரபாகரனும் ஏனைய மூத்த தலைவர்களும் ஆத்திரமும், கவலையும் அடைந்தனர். தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் விடுதலை அமைப்பு என்ற ரீதியிலும், சிறிலங்கா அரசுடன் சம பங்காளியாகப் பேச்சுகளை நடத்திவரும் ஒரு தரப்பு என்ற ரீதியிலும், வொஷிங்டன் மாநாட்டில் எமது இயக்கம் ஒதுக்கப்பட்டது ஏற்றுக்கொள்ளமுடியாத அவமானத்துக்குரிய விடயமாகப் பிரபாகரன் கருதினார்.

வொஷிங்டன் மாநாட்டில் விடுதலைப்புலிகள் இயக்கம் புறம் தள்ளப்பட்டமையைக் கண்டித்து கிளிநொச்சியில் உள்ள எமது அரசியல் தலைமையகம் 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி ஓர் அதிகாரபூர்வமான அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கை வருமாறு:-

*''வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளவிருக்கும் புனர்வாழ்வு, புனர்நிர்மாண வேலைத்திட்டங்களுக்கு ஆதரவாக, ஏப்ரல் மாதம் 14 ஆம் நாள் வொஷிங்டனில் நடைபெறவிருக்கும் சர்வதேச மாநாட்டில் விடுதலைப்புலிகள் இயக்கம் புறம் தள்ளப்பட்டமையால் நாம் ஏமாற்றமடைந்துள்ளோம்.*

*வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு, புனர்நிர்மாணத் திட்டங்களுக்கு சர்வதேச நிதிஉதவிகளை அணிதிரட்டும் முயற்சிகளில் சிறிலங்கா அரசும், விடுதலைப் புலிகள் இயக்கமும் கூட்டாகச் சேர்ந்து சமத்துவப் பங்காளிகளாக செயற்பட வேண்டும் என நோர்வேயின் அனுசரணையுடன் நடைபெறும் சமாதானப் பேச்சுகளின் ஆரம்ப கட்டத்தில் இருந்தே முடிவு செய்திருந்தோம். சமத்துவப் பங்காளிகள் என்ற கொள்கையின் அடிப்படையிலேயே, மனிதாபிமானப் புனர்வாழ்வுத் தேவைகளைக் கவனிப்பதற்காக நிறுவப்பட்ட 'சிரான்' உப - குழு அமையப் பெற்றது என்பதையும் நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இந்தக் கொள்கையின் அடிப்படையில் தான், 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி ஒஸ்லோவில் நடைபெற்ற சர்வதேச மாநாடு வெற்றிகரமாக அரங்கேற்றப்பட்டது. அந்த மாநாட்டில், அவசர தேவைகளுக்காக நிதி உதவிகளுக்கு உறுதி வழங்கப்பட்டபோதும் போரால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளின் புனர்நிர்மாணத்துக்கு பெரும் அளவில் நிதி திரட்டும் குறிக்கோளுடன் பெரும் எடுப்பிலான ஒரு சர்வதேச மாநாடு எதிர்வரும் ஜூன் மாதம் ஜப்பானில் நடைபெறவிருந்தது.*

*இதற்கிடையில் விடுதலைப் புலிகளை ஓரம்கட்டி, இந்தக் கூட்டு முயற்சியை பாழடித்ததுடன், சிறிலங்கா அரசுக்கு முதன்மை கொடுக்கும் வகையில் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி ஒரு பூர்வாங்க மாநாட்டை அமெரிக்கா கூட்டுவது எமக்கு கவலையைத் தருகிறது. தமிழ்ப் பகுதிகளில் நடைபெறவிருக்கும் புனர்நிர்மாண முயற்சிகளில் விடுதலைப்புலிகள் புறம்தள்ளப்படுகின்றமை சமாதான முன்னெடுப்புக்கான நல்லெண்ணத்துக்குப் பங்கம் ஏற்படுத்தும். சமாதானப் பாதையிலும், புனர்நிர்மாணக் குறிக்கோளிலும் எமக்கு உள்ள நம்பிக்கையையும் இது பாதிக்கும். அமெரிக்காவின் இந்த நடவடிக்கை எமக்கு கவலையையும் ஏமாற்றத்தையும் தருகிறது.''*

விடுதலைப்புலிகளின் இந்த ஆட்சேபக் குறிப்புக்கு சிறிலங்கா அரசு பதிலளிக்காது மௌனம் சாதித்தது. ஜப்பானில் நடைபெறவிருந்த சர்வதேச மாநாட்டுக்கு முன்னீட்டான ஒரு முக்கிய கூட்டத்தில் நாம் புறம் தள்ளப்பட்டமையாலும், அதற்கு நாம் தெரிவித்த ஆட்சேபத்தை அரசு அசட்டை செய்ததாலும் ஏமாற்றம் அடைந்த நாம் எமது எதிர்ப்பை உணர்த்தும் வகையில் ஜப்பான் சர்வதேச மாநாட்டில் பங்கு கொள்வதை மீள்பரிசீலனை செய்யப்போகிறோம் என அறிவித்தோம். 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் நாள் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் விடுத்த அதிகாரபூர்வமான அறிக்கையில், ''ஜப்பானில் நடைபெறவிருக்கும் சர்வதேச மாநாட்டுக்கு ஆதரவாகவும் ஆயத்தங்களைச் செய்யவும் வொஷிங்டனில் நடைபெறவுள்ள முக்கிய பூர்வாங்க மாநாட்டில் எமது அதிகார பூர்வமான பிரதிநிதிகள் பங்குகொள்ள முடியாது புறம் தள்ளப்பட்டதை ஆட்சேபிக்கும்வகையில், டோக்கியோ மாநாட்டில் பங்கு பற்றுவது என்ற முடிவை எமது இயக்கம் மீள் பரிசீலனை செய்யும்.'' - என அறிவித்தது.

விடுதலைப்புலிகள் இயக்கம் ஆட்சேபம் தெரிவித்தபோதும், வொஷிங்டன் மாநாடு, ஏப்ரல் மாதம் 14 ஆம் நாள் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ரிச்சார்ட் ஆமிட்டேச் தலைமையில் நடைபெற்றது. 21 நாடுகளைச் சேர்ந்த மூத்த இராஜதந்திரிகளும் 16 சர்வதேச நிறுவனங்களும் இந்த மாநாட்டில் பங்கு கொண்டன. அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவர், இந்திய அரசு சார்பில் கலந்துகொண்டார். ஒஸ்லோ சர்வதேசமாநாட்டில் கீழ்நிலை அதிகாரி ஒருவரை (ஒஸ்லோ இந்தியத் தூதரகத்தின் மூன்றாவது செயலர்) அனுப்பி வைத்த இந்திய அரசு, வொஷிங்டன் மாநாட்டுக்கு ஒரு மூத்த இராஜதந்திரியை அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவின் தலையீடு அதிகரித்து வருகிறது என்பதை வொஷிங்டன் மாநாடு கோடிட்டுக் காட்டியது.

சிறிலங்கா அரச பிரதிநிதிகள் குழுவுக்கு பொருளாதார சீர்திருத்த அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமை வகித்தார். இந்த மாநாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கம் புறம் தள்ளப்பட்டமைக்கு விளக்கம் அளித்துப் பேசிய ரிச்சார்ட் ஆமிட்டேச், ''எமது கொள்கை தெட்டத் தெளிவானது விடுதலைப் புலிகள் இயக்கம் சொல்லிலும், செயலிலும் ஐயப்பாட்டுக்கு இடமின்றி பயங்கரவாதத்தைக் கைவிடவேண்டும்'' - என்றார்.

சமாதானப் பேச்சு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவுமின்றி தேக்க நிலை அடைந்திருந்தது. எமது மக்களின் பெரிய சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளும் தீர்வின்றி இழுபட்டன. இந்தச் சூழ்நிலையால் விரக்தியும் வெறுப்பும் அடைந்திருந்த விடுதலைப் புலிகளுக்கு புதிதாக இன்னொரு சிக்கலும் ஏற்பட்டது. சமாதான முயற்சியில் சர்வதேச நாடுகளின் குறுக்கீடும், மிகையான தலையீடும் புதிய பிரச்சினைகளை எமது இயக்கத்துக்குத் தோற்றுவித்தன. சமாதானத்தின் சர்வதேச காவலர்கள் என்ற பாத்திரத்தை தாங்கி வந்த உலக நாடுகள் பொருளாதார உதவிகளுக்கு நிபந்தனையாக அரசியல் அழுத்தத்தை எம்மீது பிரயோகிக்க முனைந்தன. சிறிலங்கா அரசின் தேசிய நலன்களை மேம்பாடு செய்வதாக உலக நாடுகளின் தலையீடு அமைந்ததால், இனநெருக்கடியில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினர் மத்தியிலும் நிலவிய அதிகாரச் சமநிலையும் ஆழமாகப் பாதிக்கப்பட்டது. அரசு என்ற ரீதியிலும் உலக அரசுகளின் கூட்டமைப்பில் சட்டரீதியான அங்கீகாரம் பெற்ற உறுப்பினர் என்ற ரீதியிலும் சர்வதேச தலையீடு சிறிலங்காவுக்கு அனுகூலமாகவும், அரசற்ற (Non-State) அமைப்பு என்பதால் எமக்குப் பாதகமாகவும் அமைந்தது. நாசகார சூழ்ச்சிகள் நிலவும் அரசுகளது சர்வதேச கூட்டமைப்பின் சதிவலைப் பின்னலில் சிக்குண்டு நசுங்குவதை எமது இயக்கம் விரும்பவில்லை. பலம் பொருந்திய இந்த சர்வதேச சக்திகளின் பொறியில் விழுந்து விடாது சுதந்திரமாகச் செயற்படவே நாம் விரும்பினோம். ஆகவே, அன்றைய அரசியலின் வளர்ச்சிப் போக்கை ஆழமாக பரிசீலனை செய்த எமது தலைமைப்பீடம் பேச்சுகளை இடைநிறுத்துவது என்றும் டோக்கியோ சர்வதேச மாநாட்டில் பங்கு கொள்வதில்லை என்றும் தீர்க்கமான முடிவுகளை எடுத்தது. விடுதலைப்புலிகளது தலைமைப் பீடத்தின் முடிவை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவிக்குமாறு பிரபாகரன் என்னை வேண்டிக் கொண்டார். இதன்படி விடுதலைப் புலிகளின் பேச்சு குழுத் தலைவர் என்ற ரீதியில் 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எமது நிலைப்பாட்டை விவரமாக விளங்கப்படுத்திக் கீழ்க்கண்ட கடிதத்தை நான் எழுதினேன்.

கடிதத்தின் விவரம் நாளை....

(தொடரும்...)

# உள்ளூராட்சி தேர்தலை துரிதப்படுத்துமாறு அரச தரப்புகளுக்கு மகாநாயக்கர்கள் மகஜர்

கொழும்பு, ஜூன் 05

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை துரித கதியில் நடத்துமாறு கோரிக்கை ஒன்றை முன்வைத்து, மகாநாயக்க தேரர்கள் மகஜர் ஒன்றைச் சமர்ப்பிக்க உள்ளனர்.

இந்த விசேட மகஜர் பௌத்த மகாநாயக்க தேரர்களால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜர் கையளிக்கின்றமை தொடர்பில் கண்டி அஸ்கிரி மற்றும் மல்வத்து பீடாதிபதிகள் தெரிவிக்கையில்-

'ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அரச தரப்பினரிடம் இந்த மகஜர் விரைவில் ஒப்படைக்கப்பட உள்ளது.

நாளுக்கு நாள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்தி வைக்கப்படுவதால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.- என்றனர்.

(எ)

# ஹெலியில் பயணம் மேற்கொள்ளும் அரசியல் தலைவர்களுக்கு ஆபத்து!

## கொழும்பு ஊடகம் தகவல்

கொழும்பு, ஜூன் 05

ஹெலியைப் பயன்படுத்தி நாடு முழுவதும் விஜயம் மேற்கொள்ளும் முக்கிய அரசியல் தலைவர்களுக்கு ஆபத்தான நிலை ஏற்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அந்த ஊடகம் வெளியிட்ட தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வெள்ளம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் விமானப் படையினரின் ஹெலி உடைந்து விழுந்ததைத் தொடர்ந்து இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது.

விமானப் படையின் பயிற்சிக்கான செலவுகளை குறைப்பதால், ஹெலிகளின் நிலைமை தொடர்பில் ஆய்வு செய்தல், விமானிகளின் தினசரிப் பயற்சி நடவடிக்கைகள் போன்றவைகளுக்கு தடை ஏற்பட்டுள்ளதாக விமானப் படை வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

இதனால் முன் ஆயத்தங்கள் அனைத்தும் தடைப்பட்டுள்ளன என அவை மேலும் குறிப்பிட்டுள்ளன. இதன் காரணமாக ஹெலியில் பயணிப்பதைத் தவிர்க்கு மாறு ஜனாதிபதிக்கு நெருக்கமானவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இது தொடர்பில் உடனடியாகக் கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார். விமானப்படையினரின் ஹெலி உட்பட அனைத்து நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என்று ஜனாதிபதி செயலக தகவல் வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.- என்றுள்ளது.

(எ)

# முஸ்லிம் எம்.பிக்கள் அனைவரும் கூட்டாக நாடாளுமன்றத்தைப் புறக்கணிக்க வேண்டும்

## வேண்டுகோள் விடுக்கிறார் மரிக்கார் எம்.பி.

ஞானசார தேரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காமல் அரசு இழுத்தடிப்புச் செய்வதுதொடர்பில் அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கும் வகையில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கூட்டாக நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நேற்றுமுன்தினம் மெகட கொலன்னாவை ரஹ்மானியா ஜும்மாபள்ளிவாசலில் அவரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மருத்துவ முகாமில் அவர் கலந்து கொண்டார். இதன்போது ஞானசார தேரர் விவகாரம் தொடர்பில் அவரிடம் கேள்வி எழுப்பப்பட்ட போது அதற்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டில் 30 வருட கால போரை முடிவுக்குக் கொண்டுவர தங்களை அர்ப்பணித்துச் செயலாற்றிய புலனாய்வுப் பிரிவுக்கு ஞானசார தேரரைக் கண்டு பிடிக்க முடியாமல் இருக்கின்றமை இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய நகைச்சுவை .

தற்போது நடப்பவைகளைப் பார்க்கும் போது இந்த விடயத்தில் நீதித்துறையும் பொலிஸாரும் நடந்து கொள்ளும் விதம் கூட்டு அரசில் உள்ள ஒரு சக்தி ஞானசார தேரரை கைது செய்யவிடாமல் தடுப்பதையும் அவரைப் பாதுகாப்பதையும் எமக்கு பறைசாற்றுகிறது.

நாம் ஏற்கனவே ஞானசார தேரர் விடயத்தில் அரசின் உயர்மட்டங்களுக்கு தனிப்பட்ட ரீதியிலும் கூட்டாகவும் அழுத்தம் கொடுத்துள்ளோம்.

இந்த விடயம் தொடர்பில் நாம் உடனடியாக இறுதித் தீர்மானம் ஒன்றுக்கு வர வேண்டும்.

எமது தீர்மானத்தை அரசு செவிசாய்க்காத பட்சத்தில் எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கூட்டாக நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணிக்க வேண்டும்.- என்றார்.

(எ)

# கழிவு வாய்க்காலால் சுகாதாரச் சீர்கேடு சாவகச்சேரி வியாபாரிகள் விசனம்!



தென்மராட்சி, ஜூன் 05

சாவகச்சேரி பொதுச் சந்தை, மரக்கறிக் கடைகள் ஆகியனவற்றுக்கு அருகில் அமைந்துள்ள பலசரக்கு வியாபார நிலையங்களின் முன்பாக உள்ள கழிவு நீர் ஓடும் வாய்க்காலை நகர சபை ஊழியர்கள் ஒழுங்கான முறையில் துப்புரவு செய்வதில்லை. எனவே, சுகாதாரச் சீர்கேடு நிலவுகின்றது என வியாபாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நகரசபை ஊழியர்கள் தினமும் கால்வாயைத் துப்புரவு செய்கின்றனர். எனினும் அதனை உரிய முறையில் துப்புரவு செய்வதில்லை. இதனால் கழிவு நீர், குப்பைகள் என்பன வாய்க்காலுக்குள் தேங்கிக் காணப்படுகின்றன.

இதனால், கழிவு நீர் துர்நாற்றம் வீசுவதால் ஈக்களின் பெருக்கம் அதிகரித்துள்ளது. அவை கடைகளில் உள்ள பொருள்களை அசுத்தம் செய்கின்றன. இதனால் சுகாதாரச் சீர்கேடு நிலவுகின்றது.

எனவே, அதிக துர்நாற்றம், ஈ பெருக்கம் போன்றவற்றால் தமது வியாபார நிலையங்களுக்கு வருகின்ற வாடிக்கையாளர்களின் தொகை குறைவடைந்துள்ளது என வியாபாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே நகரசபை ஊழியர்கள் கால்வாய்க்குள் நீர் தேங்கிக் காணப்படாதவாறு உரிய முறையில் கழிவுகளை அகற்ற முன்வர வேண்டும் என்று அந்தப்பகுதி வர்த்தகர்களும் பொதுமக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(எ-21)

# வவுனியா புதிய மத்திய பஸ் நிலையத்தில் இ.போ.ச.பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

வவுனியா, ஜூன் 05

வவுனியாவில் 5 மாதங்களாக செயற்படாதிருந்த புதிய மத்திய பஸ் நிலையத்தில் இருந்து தூர இடங்களுக்கான இ.போ.ச.பஸ் சேவைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஒரு கோடி 95 லட்சம் ரூபா செலவில் வவுனியாவில் அமைக்கப்பட்ட மத்திய பஸ் நிலையத்தை போக்குவரத்து மற்றும் பயணிகள் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கடந்த ஜனவரி மாதம் 16 ஆம் திகதி வைபவரீதியாகத் திறந்து வைத்தார்.

வவுனியாவில் ஏ-9 வீதியில் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் நாளாந்தம் 100 பஸ்கள் வந்து செல்லத்தக்கவாறு நவீன முறையில் இந்தப் பஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

எனினும், தனியார் மற்றும் இலங்கை போக்குவர்த்துச் சபை சாரதி, நடத்துநர்களுக்கு இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள், மோதல்கள்



காரணமாக புதிய மத்திய பஸ் நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது.

கடந்த 26 ஆம் திகதி வட மாகாண போக்குவரத்து அதிகார சபையின் 9 ஆவது அமர்வு போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையில் மன்னாரில் இடம்பெற்றது. இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர்-

'கடந்த 15 ஆம் திகதி பல்வேறு சட்ட ஒழுங்குகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வட மாகாணத்துக்குள் சேவை வழங்குகின்ற இலங்கை போக்குவரத்துச் சபையினருக்கு 40வீதமும் தனியார் பஸ்களுக்கு 60வீதமும் என்ற வகையில் பஸ் சேவைகளை ஒழுங்குசெய்து, அதனடிப்படையில் இணைந்த நேர அட்டவணையை தயார் செய்து நடைமுறைப்படுத்துவது தொடர்பில் விசேட ஏற்பாடுகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் அவற்றை மீறுகின்ற தரப்பினருக்கு எதிராக 10ஆயிரம் ரூபா தண்டப்பணம் அல்லது இரண்டுவருட சிறைத் தண்டனை வழங்க நேரிடும்' என்று தெரிவித்திருந்தார்.

இதையடுத்து இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைமைக் காரியாலயம் மற்றும் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய அலுவலகம் ஆகியனவற்றின் வேண்டுகோளுக்கு இணங்க இ.போ.ச. பஸ்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தொடக்கம் புதிய பஸ் நிலையத்தில் சேவையை ஆரம்பித்துள்ளன.

இதன்படி வவுனியா நகர மத்தியில் அமைந்துள்ள போக்குவரத்துச் சபையின் பஸ் நிலையத்தில் இ.போ.ச. பஸ்கள் தரித்து நின்று பயணிகளை ஏற்றிக்கொண்டு புதிய மத்திய பஸ் நிலையத்துக்கு வந்து செல்கின்றன.

எனினும் தனியார் பஸ்கள் புதியமத்தியபஸ்நிலையத்தில் சேவையை வழங்கவில்லை என்று இ.போ.ச ஊழியர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ராஜேஸ்வரனிடம் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு வினவிய போது-

'இலங்கை போக்குவரத்துச் சபையின் அனைத்து பஸ்களும் புதிய பஸ் நிலையத்துக்குச் செல்வதில்லை.

இவ் விடயம் தொடர்பாக தற்போது வன்னி பிராந்தி பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் கூட்டம் இடம் பெறுகின்றது' என்று தெரிவித்தார்.

எனினும், புதிய மத்திய பஸ் நிலையத்தில் பயணிகள் எவரும் இல்லாத நிலையில் தற்போது கடமைக்காக புதிய பஸ் நிலையத்துக்கு இ.போ.ச. பஸ்கள் சென்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-100)

## முல்லைத்தீவில் கஞ்சாவுடன் ஒருவர் கைது!

முல்லைத்தீவு, கள்ளப்பாடு பகுதியில் 550 கிராம் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார் என்று முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு போதைத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அந்தநபர் கைதாகியுள்ளார்.

அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ள பொலிஸார், நீதிமன்றத்தில் அவரை முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (எ)

# 'மே 17' இயக்க உறுப்பினர்களின் விடுதலைக்கு குரல் கொடுப்போம்!

## அனைத்துலக தமிழர் பேரவை தெரிவிப்பு

தொப்புள் கொடி உறவுகளின் விடுதலைக்காக குரல் கொடுப்போம் என்று அனைத்துலக ஈழத் தமிழர் மக்கள் அவை தெரிவித்துள்ளது.

அனைத்துலக ஈழத் தமிழர் மக்கள் அவையினர் இது தொடர்பாக நேற்று விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தில் நீண்ட நெடுங்காலமாக அர்ப்பணிப்புடன் கூடிய அக்கறையுடன், உறுதியாகவும் உண்மையுடனும் செயற்பட்டு வருகின்ற தொப்புள் கொடி உறவுகளின் வரிசையில் சென்ற வாரம் திருமுருகன் காந்தியும் ஏனைய மனித உரிமை செயற்பாட்டாளர்களும் இந்திய அரசால் குண்டர் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டமை நீதிக்குப் பங்கம் விளைவிக்கும் செயல்.

இந்தியா மற்றும் சர்வதேச அரங்கில் இனப்படுகொலைக்கு நீதி கோருவதிலும், குற்றவாளிகளை அடையாளம் காட்டுவதிலும், இனப்படுகொலை செய்யப்பட்ட தமிழர்களை நினைவுகூர்வதிலும் திருமுருகன்காந்தியும், 'மே 17' இயக்கத்தின் ஏனைய உறுப்பினர்களும் முன்னெடுக்கும் செயற்பாடுகளைக் கவனத்தில் கொள்வது அவசியம்.

இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு சர்வதேச நீதிவேண்டும், தமிழீழம் தொடர்பில் புலம்பெயர் தமிழர்களும் பங்கேற்கின்ற பொதுவாக்கெடுப்பு வேண்டும் என்கிற இவர்களின் குரல் தொடர்ந்தும் உலகம் எங்கும் ஒலிக்க வேண்டும்.

'மே 17' இயக்க உறுப்பினர்களின் நீதியான போராட்டங்களுக்கு எமது தோழமையைத் தெரிவித்துக்கொள்ளும் அதே நேரத்தில் எந்த நிபந்தனைகளும் இன்றி அவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றோம்.- என்றுள்ளது.(எ)

## பளை துப்பாக்கிச்சூடு; சந்தேகநபர் கைது!

பளை, ஜூன் 05

பளையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் - உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த 29 வயதான ஒருவர் என்று தெரியவந்துள்ளது.

அவரை அவரது வீட்டில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கைது செய்துள்ளனர்.

கடந்த மாதம் பளைப் பகுதியில் பொலிஸாரின் வாகனத்தின் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை மேற் கொண்டிருந்தனர். அத்துடன் அந்தப் பகுதியில் இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரை, விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப் படுத்துவதற்கான நடவடிக்கையை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற் கொண்டு வருகின்றனர்.



நாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக வவுனியா வர்த்தகர் சங்கம் கடந்த இரண்டு தினங்களாக வர்த்தக நிலைய உரிமையாளர்களிடம் சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதி உதவிப் பொருள்களை வவுனியா மாவட்ட செயலகத்தில் கையளித்துள்ளது.

இதில் வர்த்தகர் சங்கத் தலைவர், பொருளாளர், செயலாளர் மற்றும் மத்திய குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். வவுனியா மாவட்ட செயலக அதிகாரிகளிடம் உணவுப் பொருள்கள் கையளிக்கப் பட்டன. (எ-100)

## இலங்கைக்குச் சுற்றுலாசெல்வோர் அவதானமாக இருக்க அறிவுறுத்து!

### உலக நாடுகள் சில தமது பிரஜைகளுக்கு முன் எச்சரிக்கை

இலங்கைக்குச் சுற்றுலா மேற்கொள்ளும் போது அவதானமாக இருக்க வேண்டும் என்று உலக நாடுகள் சில தமது பிரஜைகளுக்கு முன்னெச்சரிக்கை விடுத்துள்ளன.

சீர்ற்ற காலநிலையால் இலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாகவே இந்த முன்னெச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

பிரிட்டன் பொதுநலவாய அலுவலகம் தமது நாட்டுப் பிரஜைகளுக்கு விடுத்துள்ள ஆலோசனையில்-

"இலங்கையின் உள்ளகப் போக்குவரத்து உள்ளிட்ட ஏனைய சேவைகளைப் பயன்படுத்துகின்றமை தொடர்பில் எமது நாட்டுப் பிரஜைகள் அவதானத்துடன் இருக்க வேண்டும்.

சுற்றுலாப் பயணிகள் தாம் பயணிக்க விரும்பும் இடங்களுக்குச் செல்வதற்கு முன்னர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அனுமதியைப் பெற்று பயணங்களை ஆரம்பிக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையின் மேற்கு, தெற்கு, சப்ரகமுவ மத்திய மற்றும் வட மத்திய மாகாணங்களுக்குப் பயணிக்கும் தமது பிரஜைகள் அவதானமாக இருக்க வேண்டும். ஆஸ்திரேலிய வெளியுறவு தரப்பு தமது நாட்டுப் பிரஜைகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அதிக மழைவீழ்ச்சி தொடர்ந்தால் அரிசித் தட்டுப்பாடு ஏற்படலாம்!

### விவசாயத் திணைக்கள காலநிலை அதிகாரி எச்சரிக்கை

இலங்கையில் அடுத்து வரும் நாள்களில் அதிக மழைவீழ்ச்சி தொடர்ந்தால் நாட்டில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று விவசாயத் திணைக்களத்தின் காலநிலை அதிகாரி ரஞ்சித் புன்யவர்தன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களால் 2 லட்சம் ஹெக்ரெயர் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், அடுத்து வரும் நாள்களில் அதிக மழைவீழ்ச்சி கிடைத்தால் அரிசித் தட்டுப்பாடு ஏற்படலாம். எனவே, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக வேறு உற்பத்திகள் தொடர்பில் விவசாயிகள் கவனம் செலுத்த வேண்டும்.- என்றார்.

## இந்திய அரசின் உதவியில் 100 வீடுகள் அமைக்க நடப்பட்டது அடிக்கல்!

இந்திய அரசின் உதவியுடன் பெருந்தோட்டத் தோட்ட தொழிலாளர்களுக்கு 4 ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கான செயற்றிட்டத்தின் கீழ் இறம்பொடை எல்பொட தோட்டத்தில் 100 வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரத்தின் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது பிரதம அதிதியாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து கலந்து கொண்டார்.

மேலும், கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன், கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகர் ராதா வெங்கட்ராமன், நாடாளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜ், மத்திய மாகாண சபை உறுப்பினர் சோ. ஸ்ரீதரன், எம்.ராம் மற்றும் மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் வி.புத்திரசிகாமணி, பெருந்



தோட்டகம்பனியின் உயர் அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, எதிர்காலத்தில் மேலும் 10 ஆயிரம் வீடுகளை அமைத்துத் தருவதாக இலங்கைக்கு விஜயம் செய்திருந்தவேளை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்திருந்தார். இதன் மூலம் மலையகத்தில் 14 ஆயிரம் வீடுகள் இந்திய அரசின் நிதி உதவியுடன் அமைக்கப் படவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (எ)

# மாநில அரசுகளைப் பொருட்டாக எண்ணாமல் தன்னிச்சையாக செயற்படுகிறது மத்திய அரசு!

## சென்னையில் ராகுல் காந்தி குற்றச்சாட்டு

சென்னை, ஜூன் 05

மாநில அரசுகளைப் பொருட்படுத்தாமல் ,தன்னிச்சையாகச் செயற்படுகிறது மத்திய அரசு. மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை இறுமாப்போடு அரசு கட்டளையிடக் கூடாது.

-இவ்வாறு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்தார்.

தி.மு.க. தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான கலைஞர் கருணாநிதியின் 94 ஆவது பிறந்ததினம் நேற்று முன்தினம் சனிக்கிழமை சென்னை ராயப்பேட்டை வை.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் உள்ள அனைவரது பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டும். அதற்காக அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாட வேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடு. எதிர்த்தரப்பினரின் கருத்துகளைக் கேட்காமல் பிரதமர் மோடி தன்னிச்சையாக முடிவெடுக்கிறார். ஒரேநாளில் 130 கோடி மக்களின் பைகளில் இருந்த பணம் செல்லாது என அறிவித்தார். பணமதிப்பு நீக்கத்தால் இந்தியாவின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்துள்ளது. தாங்கள் நினைக்கும் ஒரே பாதையில் மட்டுமே இந்தியா செல்ல வேண்டும் என அவர்கள் நினைக்கின்றனர்.

ஒரே கலாசாரம் மட்டுமே இருக்க வேண்டும் என திட்டமிட்டுச் செயற்படுகின்றனர். இதை நாங்கள் ஒருபோதும் ஏற்கமாட்டோம். இந்தியாவில் ஒவ்வொருவருக்கும் கருத்துச் சொல்ல உரிமை உண்டு. கோடிக்கணக்கான மக்களின் குரல் நசுக்கப்படுவதை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. தமிழ்மொழி, கலாசாரம், பண்பாடு இந்தியா முழுவதும் கலந்துள்ளது.

தமிழக மக்களின் குரலாக கருணாநிதியின் குரல் ஒலிக்கிறது. தமிழர்களின் உணர்வுகளைத்தான் அவர் பிரதிபலிக்கிறார் என மக்கள் நம்புகின்றனர். இதுவே அவரது வெற்றிக்குக் காரணம். சரத் பவாரின் பேச்சு மகாராஷ்டிரா மக்களின் குரலாகவும், நிதிஷ்குமாரின் பேச்சு பிஹார் மக்களின் குரலாகவும், மம்தா பானர்ஜியின் பேச்சு மேற்கு வங்க மக்களின் குரலாகவும் ஒலிக்கின்றன. அதுபோலவே தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலினின் பேச்சு தமிழக மக்களின் குரலாக ஒலிக்கிறது.-என்றார். (ச)

## எய்ம்ஸ் ஆஸ்பத்திரியில் மேனகாவுக்குச் சிகிச்சை

லக்னோ, ஜூன் 05

மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சர் மேனகாவுக்கு 'எய்ம்ஸ்' மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை செய்யத்திட்டமிடப்பட்டுள்ளது.



மத்திய அமைச்சர் மேனகா, உத்தரப் பிரதேசத்தில் தன் சொந்த தொகுதியான பிலிபிட்டிக்கு கடந்த வெள்ளிக்கிழமை சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இதன் போது, அவர் கடும் வயிற்று வலியால் அவதிப்பட்டார். இதையடுத்து, அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பரிசோதனைகள் நடத்தப்பட்டன. இதன் போது, பித்தப்பையில் கற்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

இதையடுத்து, டில்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் மேனகா சேர்க்கப்பட்டார். அவருக்கு, சில நாள்களில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படும் எனத் தகவல்கள் கூறுகின்றன.

இது தொடர்பில் மேனகாவின் மகனும், பா.ஜ.க. தலைவர்களில் ஒருவருமான வருண், 'டுவிட்டர்' வலை தளத்தில் தெரிவிக்கையில்-

'என் தாயார் மேனகா, எய்ம்ஸ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இன்னும் சில நாள்களில், அவருக்கு அறுவைச்சிகிச்சை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. என் தாயாருக்காகப் பிரார்த்தனை செய்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.'-என்றுள்ளது.(ச)

## பழனிச்சாமியின் நாடகம் முடிந்தால்தான் இரு அணிகளின் இணைப்புச் சாத்தியமாகும்!

சென்னை, ஜூன் 05

தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அணியின் நாடகம் முடிவுக்கு வரும்போதே, இரு அணிகளின் இணைப்புச் சாத்தியமாகும்.

-இவ்வாறு தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.



பன்னீர் தெரிவிப்பு

அ.தி.மு.கவின் இரு அணிகளும் இணைகின்றமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அ.தி.மு.கவின் இரு அணிகளும் இணையும் என்று எதிர்பார்க்கின்றோம். ஜெயலலிதாவின் இறப்பிலுள்ள மர்ம முடிச்சு அவிழ்க்கப்பட வேண்டும். அதற்கு நீதி விசாரணை ஆணையகம் அமைக்கப்பட வேண்டும் என்பதே எங்களுடைய கோரிக்கை.

மேலும், ஜெயலலிதாவின் கொள்கை அடிப்படையில் நன்மை பயக்கின்ற எந்தவொரு திட்டங்களுக்கும் நாங்கள் ஆதரவு தருவோம். தமிழகத்தில் அரசியலுக்கு யார் வேண்டுமானாலும் வரலாம்.-என்றார். (ச)

## மகராஷ்டிராவில் நிலநடுக்கம்!

மகராஷ்டிரா மாநிலத்தின் கொய்னா பகுதியில் 4.8 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு 11.45 மணியளவில் ஏற்பட்ட இந்தநிலநடுக்கம் மகராஷ்டிராவின் தெற்குப் பகுதியிலுள்ள சங்க்லி, கோலாப்பூர் ஆகிய இடங்களில் உணரப்பட்டுள்ளது.

எனினும் சேத விவரங்கள் தொடர்பில் எவ்வித தகவலும் வெளியாகவில்லை.

கொய்னாபகுதியில் ஏற்கனவே கடந்த மாதம் 20 ஆம் திகதி மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சசிக்கு கேள்விகளைத் தெரிவிக்க அமலாக்கத்துறை எதிர்ப்பு!

சென்னை, ஜூன் 05

அந்நிய செலாவணி மோசடி வழக்கில், குற்றச்சாட்டுகள் பதிவு செய்யக் கேட்கப்படும் கேள்விகளை, சசிகலாவுக்கு முன்கூட்டியே தெரிவிப்பதற்கு அமலாக்கத்துறை எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

கர்நாடக மாநிலம் பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சசிகலா மீது சென்னை எழும்பூர் பொருளாதாரக் குற்றவியல் நீதிமன்றத்தில் அந்நியச் செலாவணி மோசடி வழக்கு நடந்து வருகிறது. இந்த வழக்கில் அவர் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்வதற்கு அவரை காணொலி வாயிலாக ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையடுத்து, சசிகலாவின் வழக்கறிஞர், 'அவரிடம் கேட்கப்படும் கேள்விகளை முன்கூட்டியே தர வேண்டும்' எனக் கோரிக்கை விடுத் திருந்தார். இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, அமலாக்கத்துறை இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது. இதையடுத்து, விசாரணையை நாளை செவ்வாய்க்கிழமைக்கு நீதிபதி ஒத்தி வைத்தார்.

## நடிகர் சாமிக்கண்ணு காலமானார்!




நடிகர் சாமிக்கண்ணு தனது 95 ஆவது வயதில் உடல்நலக்குறைவு காரணமாக சென்னையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலமானார்.

தமிழ்த் திரையுலகில் 400 படங்களுக்கு மேல் நடித்த இவர், இயக்குநர்கள் மகேந்திரன், இராம நாராயணன், ராஜசேகர், ராஜ்கிரண் உட்பட பல இயக்குநர்களிடம் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## 'வட்ஸ் அப்பில்' வைரல் ஆகிறது கருணாநிதியின் சொத்துப்பட்டியல்!

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் சொத்துப்பட்டியல் விவரம் தொடர்பான தகவல் 'வட்ஸ் அப்'பில் 'வைரல்' ஆகி உள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் பெறுமதி இந்திய ரூபாவில் வருமாறு:-




6 ஆயிரத்து 124 சதுர அடி பரப்பளவு கொண்ட கருணாநிதியின் கோபாலபுரத்து வீட்டின் மதிப்பு 5 கோடி ஆகும். போரூர் ராமச்சந்திரா மருத்துவமனைக்கு அருகில் இருக்கும் எம்.எம். இண்டஸ்ட்ரீஸ் மதிப்பு 2 கோடி. ஆயிரத்து 472 சதுர அடி புறம்போக்கு நிலத்திலும் அமைந்துள்ள கோடம்பாக்கம் முரசொலி அலுவலகக்கட்டடத்தின் மதிப்பு 20 கோடி. தஞ்சாவூர் மாவட்டம் அகரத்திருநல்லூர் கிராமத்தில் கருணாநிதிக்கு இருக்கும் இடம் 21.30 ஏக்கர் ஆகும். கூர்க் (குடகு மலை) கோப்பித் தோட்டம் கலைஞர் குடும்பத்துக்குச் சொந்தமானது. சென்னை சி.ஐ.டி. குடியிருப்பில் 9 ஆயிரத்து 494 சதுர அடி பரப்பளவு கொண்ட இடத்தில் 3 ஆயிரத்து 500 சதுர அடியில் கட்டப்பட்டு இருக்கும் கருணாநிதியின் துணைவியார் இராஜாத்தி அம்மாளின் வீட்டு மதிப்பு 12 கோடி ஆகும். மண்ணிவாக்கம் கிராமத்தில் ராஜாத்தி அம்மாளுக்கும், கனிமொழிக்கும் இருக்கும் 300 ஏக்கரின் மதிப்பு 4.5 கோடி. 'ரோயல் பேர்னிச்சர்' என்ற பெயரில் இருக்கும் ராஜாத்தி அம்மாளின் ஷொப்பிங் நிறுவனத்தின் மதிப்பு 10 கோடி ஆகும்.


திருவள்ளூர் மாவட்டத்தில் தயாளு அம்மாளுக்கு இருக்கும் 384 ஏக்கரின் மதிப்பு ஒரு கோடி. கோரமண்டல் சிமெண்ட் கம்பனியில் இருக்கும் 11 சதவிகித பங்குகளின் மதிப்பு 50 கோடி ஆகும்.

கருணாநிதி 2006 பொதுத் தேர்தலின்போது கூறிய சொத்து மதிப்பு ரூ. 44 கோடி 14 லட்சத்து 93 ஆயிரம் ரூபா ஆகும். 2011 பொதுத் தேர்தலின் போது கூறிய சொத்து மதிப்பு ரூ. 26 கோடி 57 லட்சத்து 62 ஆயிரம் ரூபா ஆகும். 2016 பொதுத் தேர்தலின் போது தெரிவித்த சொத்து மதிப்பு 13 கோடி 42 லட்சம் ரூபா ஆகும். - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச).


# லண்டனில் மீண்டும் தாக்குதல்கள்: 6 பேர் உயிரிழப்பு: 30 பேர் காயம்!












## பயங்கரவாதத் தாக்குதல் எனப் பொலிஸார் சந்தேகம்

லண்டன், ஜூன் 05

ஐக்கிய இராச்சியத்தின் தலைநகரான லண்டனின் மத்திய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இரு தாக்குதல்களில், 6 பேர் கொல்லப்பட்டனர். 30 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். மேலும் தாக்குதல்களை மேற்கொண்டவர்கள் எனக் கருதப்படும் மூவர் பொலிஸாரால் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதல்கள் பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல்கள், இலங்கை நேரப்படி நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2:38 மணிக்கு (ஐக்கிய இராச்சிய நேரப்படி நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 10:08 இக்கு) இடம்பெற்றுள்ளது.

லண்டன் பாலத்தில் சென்று கொண்டிருந்த வான் ஒன்று தாறுமாறாக ஓடி பாலத்தில் நடந்து சென்றவர்கள் மீது மோதியது. இதனையடுத்து, மூன்று பேர் லண்டன் பாலத்திலிருந்து அருகிலுள்ள 'பரோ மார்க்கெட்' என்ற பகுதிக்குள் கத்திகளுடன் ஓடினர். கண்ணில் தென்பட்டவர்கள் மீது சரமாரியாகத் தாக்குதல நடத்தினர். இந்தத் தாக்குதலில் பொதுமக்கள் 6 பேர் உயிரிழந்தனர். பலர் காயம் அடைந்தனர்.

மேலும், லண்டனின் தென் மேற்குப் பகுதியிலுள்ள வொக்வோல் பகுதியிலும், கத்திக்குத்துச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதல், ஏனைய இரண்டு தாக்குதல்களோடு தொடர்புடையது அல்ல எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரண்டு வாரங்களுக்கு முன்னதாக லண்டனின் மான்செஸ்டர் நகரில் தற்கொலைப்படை தீவிரவாதி ஒருவர் இசை நிகழ்ச்சி ஒன்றில் நடத்திய தாக்குதலில் 22 பேர் உயிரிழந்தனர். அந்தத் தாக்குதல் சம்பவத்தின் தாக்கத்தில் இருந்து லண்டன் மக்கள் வெளியே வரும் முன்னர் மேற்படி தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. பிரித்தானியாவில் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் அடுத்தடுத்து பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெறுகின்றமை, லண்டனில் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

தொடர் தாக்குதல்களால் லண்டனில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பிரதமர் தெரெசா மே தலைமையில் அவசர பாதுகாப்புச்சபைக் கூட்டங்கள் இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அமெ. விமானத் தாக்குதல்களில் சிரியாவில் 43 பேர் உயிரிழப்பு!

டமோஸ்கஸ், ஜூன் 05

வடக்கு சிரிய மாகாணமான ரக்காவில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல்களில் 43 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலை அமெரிக்கா மேற்கொண்டது எனவும் அதில் கொல்லப்பட்டவர்கள் பொதுமக்கள் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவர்கள் தொடர்பில் தகவல் வெளியிட்ட சிரிய தொலைக்காட்சி ஒன்று, அவர்களில் சிறு குழந்தைகளும் உள்ளடங்குகின்றனர் எனத் தெரிவித்துள்ளது.

சிரியாவில் உள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளின் நிலைகளைக் குறிவைத்துக் கடந்த 2014 ஆம் ஆண்டு தொடக்கம் அமெரிக்கா மற்றும் அதன் கூட்டுப்படைகள் ஆகியன ஒன்றிணைந்து தாக்குதல் நடத்துகின்றன.

இந்தநிலையில், கடந்த ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 23 ஆம் திகதி வரை ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்காவால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் குறைந்தது 225 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பாதிக்கப்பட்ட பிரித்தானிய மக்களுக்கு அமெரிக்கா பக்கபலமாக இருக்கும்!

### ட்ரம்ப் ஆறுதல்



பிரித்தானியாவில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமெரிக்கா எப்போதும் ஆறுதலாக இருக்கும்.

-இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆறுதல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது 'ட்விட்டர்' பக்கத்தில் தெரிவிக்கையில்-

'லண்டன் உட்பட பிரித்தானியாவில் என்ன நடந்தாலும் அதனை எதிர்கொள்ள அமெரிக்கா எப்போதும் உறுதுணையாக இருக்கும். தீவிரவாதத்தை எதிர்கொள்வதில் பிரித்தானிய மக்களுக்கு, அமெரிக்கா பக்கபலமாக இருக்கும். எனவே யாரும் அச்சப்பட வேண்டாம். கடவுள் ஆசி உண்டாகட்டும்'.- எனக் குறிப்பிட்டுள்ளார்.

## கர்ப்பப் பை புற்று நோய்க்கு புதிய மருந்து!

பெண்களுக்கு ஏற்படும் கர்ப்பப்பை புற்று நோயைக் குணப்படுத்த விஞ்ஞானிகள் புதிய மருந்து ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். அதற்கு 'ஓ.என்.எக்ஸ்.- 0801' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த மருந்தால் நல்ல நிலையில் உள்ள செல்கள் அழிய மாட்டா. புற்றுநோய் பாதித்த செல்கள் மட்டுமே அழிவடைகின்றன. இந்த மருந்தை இங்கிலாந்தில் உள்ள புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தின் மருந்து தயாரிப்பு நிறுவன விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். கர்ப்பப்பை புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 15 பெண்களுக்கு இந்த மருந்து வழங்கப்பட்டது. அவர்களில் 7 பேருக்கு புற்று நோய்க் கட்டிகள் சுருங்கி சிறிதாகின. இந்த மருந்து மூலம் கர்ப்பப்பை புற்று நோயைக் குணப்படுத்த முடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## காபூலில் இறுதிச்சடங்கில் குண்டு வெடிப்பு: 18 பொதுமக்கள் சாவு: 30 பேர் படுகாயம்!

ஆப்கானிஸ்தான் நாட்டின் முக்கிய பிரமுகர் ஒருவரின் மகனின் இறுதிச்சடங்குகள் காயர் கானாவில் அமைந்துள்ள கல்லறையில் இடம்பெற்றது. இதன் போது, மூன்று குண்டுகள் தொடர்ச்சியாக வெடித்தமையால் 18 பொதுமக்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். 30 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் கடந்த வெள்ளிக்கிழமை போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தின்போது ஆப்கானிஸ்தான் முக்கிய அரசியல் தலைவரான ஆலம் இஸ்தியாரின் மகன் உதூப், பொலிஸ் துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டார். அவரது இறுதிச்சடங்குகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றன. அப்போது அப்பகுதியில் மூன்று வெடிகுண்டுகள் தொடர்ச்சியாக வெடித்தன.

ஆப்கான் அரசின் தலைமை செயல் அதிகாரி அப்துல்லா இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். ஆனால், அவருக்குப் பாதிப்பில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தாக்குதலுக்கு இது வரை எந்த தீவிரவாத இயக்கமும் பொறுப்பேற்கவில்லை. கடந்த வியாழக்கிழமை காபூல் நகரில் உள்ள வெளிநாட்டு தூதரகங்கள் அமைந்துள்ள பகுதிகளில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 90 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இலங்கையை தோல்விக்குள் வீழ்த்திய அம்லா, தாஹிர்!



லண்டன், ஜூன் 05

சம்பியன்ஸ் கிண்ணத்துக்காக இலங்கை மற்றும் தென்னாபிரிக்க ஆகிய அணிகள் மோதிய குழு 'பி' இற்கான போட்டியில், 96 ஓட்டங்களால் இலங்கையை வீழ்த்தி தென்னாபிரிக்க அணி சம்பியன்ஸ் கிண்ணச் சுற்றுப் போட்டியை வெற்றியுடன் ஆரம்பித்தது.

லண்டன் ஓவல் மைதானத்தில் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஆரம்பமாகி யிருந்த இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றிருந்த இலங்கை அணித்தலைவர் உபுல் தரங்கவால் துடுப்பாட பணிக்கப்பட்டிருந்த தென்னாபிரிக்க அணி குயின்டன் டி கொக் மற்றும் ஹஷிம் அம்லா ஆகியோருடன் துடுப்பாட மைதானம் இறங்கியது.

தென்னாபிரிக்க அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் போட்டியை மெதுவாகவே தொடங்கியிருந்தனர். ஆரம்பத்தில் சுரங்க லக்மால் வீசிய போட்டியின் நான்காவது ஓவரில் இலங்கை அணிக்கு விக்கெட் பெறும் வாய்ப்பு ஒன்று கிடைக்கப்பெற்ற போதிலும் மூன்றாம் நடுவரால் அது ஆட்டமிழப்பு இல்லை என மறுக்கப் பட்டிருந்தது.

தொடர்ந்தும் மந்த கதியான ஆட்டத்தை வெளிப்படுத்திய தென்னாபிரிக்க அணியின் முதல் விக்கெட் அவ்வணி, 44 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் பறிபோனது. இதன் போது, ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான குயின்டன் டி கொக் 23 ஓட்டங்களுடன் ஓய்வறை திரும்பின. இலங்கை அணிக்கு மிகவும் தேவையாக இருந்த தென்னாபிரிக்க அணியின் முதல் விக்கெட் நுவன் பிரதீப் மூலம் கைப்பற்றப் பட்டிருந்தது.

இந்த விக்கெட்டை அடுத்து களத்தில் நின்ற ஹஷிம் அம்லா உடன் கைகோத்த பாப் டு ப்லெசிஸ் நிதானமாகவும் நுட்பமாகவும் ஆடி அணியின் மொத்த ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தும் பணியில் ஈடுபடத் தொடங்கினார். அம்லா-டு ப்லெசிஸ் ஜோடியால் இரண்டாம் விக்கெட்டுக்காக உறுதியான 145 ஓட்டங்கள் இணைப் பாட்டமாக பகிரப்பட்டமையுடன் தென்னாபிரிக்க அணி மிகவும் வலுவான நிலைக்குச் சென்றது.

அவ்வணியின் மூன்றாம் விக்கெட்டாக மீண்டும் நுவன் பிரதீபின் பந்து வீச்சில் ஆட்ட மிழந்த டு ப்லெசிஸ், மொத்தமாக 70 பந்துகளில் 6 பவுண்டரிகள் அடங்கலாக 75 ஓட்டங்களைக் குவித்திருந்தார். தொடர்ந்து வந்த தென்னாபிரிக்க அணியின் முக்கிய துடுப்பாட்ட வீரர்கள் பெரிதும் சோபிக்காத நிலையில் தனது துடுப்பாட்ட திறமையை வெளிக்காட்டியிருந்த ஹஷிம் அம்லா தனது 25 ஆவது ஒரு நாள் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

குசல் மெண்டிஸ் மற்றும் நிரோஷன் திக்வெல்ல ஆகியோரின் துரித கதியிலான செயற்பாட்டில் 'ரன் அவுட்' செய்யப்பட்ட அம்லா மொத்தமாக 115 பந்துகளில் 2 சிக்ஸர்கள் மற்றும் 5 பவுண்டரிகள் அடங்கலாக 103 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இதனையடுத்து மத்திய வரிசையில் துடுப்பாட வந்திருந்த ஜே.பி. டுமினியின் அதிரடி ஆட்டத்துடன், 50 ஓவர்கள் நிறைவில் 6 விக் கெட்டுகளை இழந்த தென்னாபிரிக்க அணி 299 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

தொடர்ந்து, 50 ஓவர்களில் 300 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என பதிலுக்குத் துடுப்பாடிய இலங்கை அணி தமது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான உபுல் தரங்க மற்றும் நிரோஷன் திக்வெல்ல ஆகியோரின் சிறப்பாட்டம் மூலம் நல்லதோர் ஆரம்பத்தைப் பெற்றிருந்தது.

கச்சிதமான ஆட்டம் மூலம் பவுண்டரி எல்லைகளை பதம் பார்த்திருந்த திக்வெல்ல 33 பந்துகளில் 5 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் அடங்கலாக 41 ஓட்டங்களைப் பெற்று மோர்ன் மொர்க்கலின் பந்துவீச்சில் இலங்கை அணியின் முதல் விக்கெட்டாக ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து இலங்கை அணி சீரான இடைவெளியில் இரண்டாவது விக்கெட்டையும் பறிகொடுத்தது. இரண்டாம் விக்கெட்டாக குசல் மெண்டிஸ் குறைவான ஓட்டங்களுடன் ஓய்வறை திரும்பியிருப்பினும் இலங்கை அணி தமது இலக்கைத் தொடும் பயணத்தில் வலுவாகவே காணப்பட்டிருந்தது.


இவ்வாறனதொரு நிலையில், தென்னாபிரிக்க அணியின் தலைவர் ஏ.பி.டி வில்லியர்ஸ் மூலம் மேற்கொள்ளப் பட்டிருந்த 'ரன் அவுட்' மூலம் நான்காம் இலக்க வீரராக களமிறங்கியிருந்த தினேஷ் சந்திமால் ஓய்வறை திரும்பினார். இவரின் விக்கெட்டை தொடர்ந்து போட்டியின் 18 ஆவது ஓவரை வீசிய இம்ரான் தாஹிர் புதிதாக களம் நுழைந்திருந்த சாமர கப்புகெதரவை ஓட்டம் ஏதுமின்றி சடுதியாக ஆட்டமிழக்கச் செய்தார். இதனால், குறுகிய இடைவெளியில் இரண்டு விக்கெட்டுகளை பறிகொடுத்த இலங்கை அணி 117 ஓட்டங்களுக்கு 4 விக் கெட்டுகளை இழந்து தடுமாறியது.

மீண்டும் சிறப்பான பந்துவீச்சை வெளிக்காட்டியிருந்த இம்ரான் தாஹிர் இலங்கை அணித்தலைவர் உபுல் தரங்கவையும் வீழ்த்த போட்டி தென்னாபிரிக்க அணியின் கட்டுப்பாட்டுக்குள் சென்றது. இதனையடுத்து களம் நுழைந்த இலங்கை அணியின் பின்வரிசை துடுப்பாட்ட வீரர் களில் குசல் பெரேரா தவிர ஏனைய வீரர்கள் மோசமான ஆட்டத்தை வெளிக்காட்ட, முடிவில், 41.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்த இலங்கை அணி 203 ஓட்டங்களை மாத்திரமே பெற்று இப்போட்டியில் 96 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

தென்னாபிரிக்க அணியின் பந்து வீச்சில், இலங்கை அணிக்கு அதிக நெருக்கடி தந்திருந்த இம்ரான் தாஹிர் மொத்தமாக 27 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை யும், வலதுகை வேகப்பந்து வீச்சாளர் கிரிஸ் மொரிஸ் இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக இம்ரான் தாஹிர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இலங்கை அணி சம்பியன்ஸ் கிண்ணத்தில் அடுத்ததாக, இந்திய அணியுடன் ஜூன் மாதம் 8 ஆம் திகதி லண்டன் ஓவல் மைதானத்தில் மோதவுள்ளது.

# இத்தாலியில் சம்பியன் லீக் உதைபந்து போட்டியில் பதற்றம்!



மாட்ரிட், ஜூன் 05

இத்தாலியில் சம்பியன் லீக் உதைபந்தாட்டப் போட்டியைக் காண்பதற்காக ரசிகர்கள் கூடியிருந்த வேளையில், பட்டாசுகள் ரசிகர்களை நோக்கி வந்ததால் மக்கள் அலறி அடித்து ஓடியதில் ஏராளமானோருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளன.

சம்பியன்ஸ் லீக் உதை பந்தாட்டப் போட்டியின் இறுதிபோட்டி கார்டிப்பில் நடைபெற்றது.

ரியல் மாட்ரிட் அணியும் ஜூவென்ட்ஸ் அணியும் மோதின. இந்தப் போட்டியில் ரியல் மாட்ரிட் அணி 4-1 என்ற கணக்கில் கோல் அடித்து கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்த நிலையில், இந்த பரபரப்பான போட்டியை காண்பதற்கு ஜூவென்ட்ஸ் அணி ரசிகர்கள் இத்தாலியில் உள்ள டுரின் என்ற பகுதியில் அமைந்துள்ள பிஆஸ்ஸ்ற் சான் கார்லோ பகுதியில் கூடியுள்ளனர்.

சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அங்கு கூடியிருந்த நிலையில், அவர்களுக்காக அங்குள்ள பெரிய திரையில் இந்தப் போட்டி நேரடியாக ஒளிப்பரப்பப்பட்டுள்ளது.


போட்டி இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்த நேரத்தில் கூட்டத்தில் இருந்த ரசிகர்கள் சிலர் பட்டாசை கொளுத்தியுள்ளனர்.

வெடித்துக் கொண்டிருந்த பட்டாசுகள் திடீரென்று போட்டியை பார்த்துக் கொண்டிருந்த ரசிகர்கள் கூட்டத்திற்கு மத்தியிலும் வந்து வீழ்ந்து வெடித்ததால், அங்கிருந்த ரசிகர்கள் வெடி குண்டு வெடித்து விட்டது என்று எண்ணி பீதியில் அலறியடித்துக் கொண்டு ஓடினர்.

ஒரே நேரத்தில் அனைவரும் ஓடியதால், கூட்ட நெரிசலில் பலரும் சிக்கிக் கொண்டமையுடன், ஏராளமானோர் கீழே விழுந்தனர். இதனால் பலருக்கு இரத்தக் காயங்கள் ஏற்பட்டன.

இந்த நெரிசலில் சிக்கிக் கொண்ட பலர் அதில் இருந்து மீண்ட பின் இரத்தக் காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். ஒரு சிலர் இரத்தக் காயங்களுடன் ஓடிய சம்பவம் தொடர்பான வீடியோவும் வெளியாகியுள்ளது.

# அரைஇறுதியில் சாய்னா!




பாங்கொக், ஜூன் 05

தாய்லாந்து ஓபன் பட்மின்டன் போட்டியின் நேற்று முன்தினம் ஆட்டத்தில் பெண்கள் ஒற்றையர் கால்இறுதியில் இந்தியா வீராங்கனை சாய்னா நேவால் ஜப்பான் வீராங்கனை ஹருகோ சுகியைச் சாய்த்து அரை இறுதியை எட்டியுள்ளார்.

தாய்லாந்து ஓபன் பட்மிண்டன் போட்டி பாங்கொக்கில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த கால் இறுதி ஆட்டம் ஒன்றில் இந்திய வீரர் சாய் பிரனீத், தாய்லாந்து வீரர் கன்டபோன் வாங்ஷ ரோனைச் சந்தித்தார்.

51 நிமிடம் நடந்த இந்த ஆட்டத்தில் சாய் பிரனீத் 21-16, 21-17 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

# உபுல் தரங்கவுக்கு இரண்டு போட்டிகளில் விளையாடத் தடை!



லண்டன், ஜூன் 05

நடைபெற்று முடிந்திருக்கும் தென்னாபிரிக்க அணியுடனான போட்டியில் இலங்கை அணி மந்த கதியில் ஓவர்களை வீசி போட்டியைத் தாமதப்படுத்தியதுஎன்ற குற்றச்சாட்டின் அடிப்படையில், அவ் அணியின் தலைவர் உபுல் தரங்க சம்பியன்ஸ் கிண்ணத்தில் எதிர்வரும் இரண்டு போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்றிருந்த சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் குழு 'பி' இற்கான இந்தப் போட்டியில், இலங்கை அணித்தரப்பு வழமைக்கு மாறாக 50 ஓவர்களை வீச அதிக நேரம் எடுத்தது.

ஒரு அணிக்கு 50 ஓவர்கள் வீச வழங்கப்படும் நேரத்தில் நான்கு ஓவர்கள் குறைவாகவே இலங்கை அணி வீசியிருந்தது.

இந்தப் போட்டிக்கு ஐ.சி.சி போட்டி மத்தியஸ் தராகக் கடமையாற்றிய டேவிட் பூன் இந்தக் குற்றச்சாட்டை உறுதிப்படுத்தியிருந்தார்.

எனவே, ஐ.சி.சியின் மந்த கதி ஓவர்கள் தொடர்பான சட்டக்கோவை விதிமுறைகள் சாரம் 2.5.2 இன் அடிப்படையில், இந்தக் குற்றத்திற்காக இலங்கை அணி வீரர்களுக்கு போட்டிக் கட்டணத்தில் 60 சதவீத அபாரதமும் இலங்கை அணித் தலைவருக்கு இரண்டு போட்டித்தடைப் புள்ளிகளும் தண்டனையாக வழங்கப்பட்டிருக்கின்றன.

இரண்டு போட்டித்தடைப் புள்ளிகளை வீரர் ஒருவர் பெறுவராயின் அவருக்கு அடுத்து முதலாவதாக வரும் ஒரு டெஸ்ட் போட்டியிலோ அல்லது இரண்டு ஒரு நாள் போட்டிகளிலோ விளையாட முடியாது இருக்கும்.

எனவே, சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இலங்கை விளையாட இருக்கும் இந்திய அணியுடனான போட்டியிலும் (ஜூன் 8), பாகிஸ்தான் அணியுடனான போட்டியிலும் (ஜூன் 12) உபுல் தரங்கவிற்கு பங்கேற்க முடியாத நிலை உருவாகியுள்ளது. உபுல் தரங்க தன் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றத்தை ஒப்புக் கொண்ட காரணத்தினால், மேலதிக விசாரணைகள் எதற்கும் தேவை ஏற்பட்டிருக்கவில்லை.

சம்பியன்ஸ் கிண்ணத்தில் இலங்கை அணி மோதும், அடுத்த போட்டி ஆரம்பமாக இன்னும் நான்கு நாள்கள் வரையில் இருப்பதனால், காயம் காரணமாக ஓய்விலிருக்கும் இலங்கை அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் இந்தக் காலப் பகுதியில் பூரண உடற்தகுதி பெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்த போட்டியில் சிலவேளைகளில் மத்தியூஸின் உடற்தகுதி கேள்விக் குறியாகும் பட்சத்தில் இலங்கை அணியின் தலை வராக தினேஷ் சந்திமால் செயற்படும் சந்தர்ப்பம் உருவாகியுள்ளது.

# 29 ஆயிரம் குத்துகளுக்கு 57 மில்லியன் டொலர்கள்!

## அமெரிக்காவின் குத்துச்சண்டை ஜாம்பவானின் சாதனை!





நியூயோர்க், ஜூன் 05

அமெரிக்காவின் குத்துச் சண்டை ஜாம்பவான் முகமது அலி கடந்த ஆண்டு யூன் மாதம் 3 ஆம் திகதி காலமானார். அவரது வாள்நாளில் அவர் வாங்கிய குத்துகளின் எண்ணிக்கை 29 ஆயிரம் என கூறப் படுகிறது.

முகமது அலியின் முதல் நினைவு தினத்தை முன்னிட்டு கென்டகி மாகாணத்தில் அவர் வாழ்ந்த வீடு புனரமைக் கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு அந்த வீடு முகமது அலியின் புகைப்படக் காட்சியகமாக மாற்றப்பட்டது. அப்போது முதல் இதுவரை 10 ஆயிரம் பார்வையாளர்கள் வந்து சென்றுள்ளனர்.

முகமது அலி 1960 ஆம் ஆண்டு முதல் 1981 ஆம் ஆண்டு வரை தொழில் முறையாக 61 போட்டிகள் உட்பட பல குத்துச்சண்டை போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

1984 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒரு விழாவில் தான் வாங்கிய பஞ்ச்கள் (குத்து) குறித்து அவர் பகிர்ந்து கொண்டுள்ளார்.

அப்போது ''இன்று நான் மெதுவாகப் பேசுகிறேன் என மக்கள் சொல்கிறார்கள். அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. காரணம் நான் வாங்கிய குத்துகள் அத்தனை. இதுவரை விளையாடிய போட்டிகளில் வாங்கிய குத்துகளை எண்ணி வந்திருக்கிறேன். 29 ஆயிரம் குத்துகள் மொத்தம். ஆனால், அதற்காக எனக்குக் கிடைத்த வருமானம் 57 மில்லியன் டொலர்''.- என்று கூறியுள்ளார்.

குத்துச்சண்டையின் போது, பலமுறை தலையில் அடிபட்டதால், முகமது அலிக்கு தலையில் ரத்த உறைவு ஏற்பட்டு பக்க வாதம் தாக்கியது.

கடந்த 2013 ஆம் ஆண்டு கடும் உடல்நலைக் குறைவால் பாதிக்கப்பட்ட அலி, ஓரிரு மாதங்கள் கூட தாங்கமாட்டார் என மருத்துவர்கள் கூறி வந்த நிலையில், அதையும் தாண்டி வந்தார் அலி.

அடுத்தடுத்த ஆண்டுகளில் நிமோனியா பாதிப்பு. சிறுநீரகக் கோளாறு, என பல நோய்கள் அலியை வதைத்தன. இதனையடுத்து யாராலும் வெல்ல முடியாத முகம்மது அலியை மரணம் வென்றது கடந்த ஆண்டேயாகும்.

# பிரெஞ்சு ஓபன் டென்னிஸ்: 4 ஆவது சுற்றில் முர்ரே, சைமோனா!

பாரிஸ், ஜூன் 05

பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியில் உலகின் முதல் நிலை வீரரான பிரிட்டனின் அன்டி முர்ரே, ருமேனியாவின் சைமோனா ஹேலப் உள்ளிட்டோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றான 4 ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் 3 ஆவது சுற்றில் முர்ரே 7-6, 7-5, 6-0 என்ற நேர் செட்களில் ஆர்ஜன்டினாவின் ஜுவான் மார்ட்டின் டெல் போட்ரோவை தோற்கடித்தார். இதுவரை ஜுவானுடன் 10 ஆட்டங்களில் மோதியுள்ள முர்ரே 7 ஆவது வெற்றியைப் பெற்றுள்ளார்.



மற்றுமொரு போட்டியில் குரோஷியாவின் மரின் சிலிச் 6-1, 6-3, 6-3 என்ற நேர் செட்களில் ஸ்பெயினின் பெலிஸியானோ லோபஸ தோற்கடித்தார்.

மகளிர் ஒற்றையர் 3 ஆவது சுற்றில் ருமேனியாவின் சைமோனா ஹேலப் 6-0, 7-5 என்ற நேர் செட்களில் ரஷ்யாவின் டேரியா காஸட்கினாவை தோற்கடித்தார்.

அடுத்த சுற்றில் ஸ்பெயினின் கார்லா சுவாரெஸ சந்திக்கிறார் ஹேலப்.

அதேநேரத்தில் போட்டித் தரவரிசையில் 9 ஆவது இடத்தில் இருந்த போலந்தின் அக்னீஸ்கா ரத்வன்ஸ்கா 2-6, 1-6 என்ற நேர் செட்களில் பிரான்ஸின் அலைஸ் கார்னெட்டிடம் அதிர்ச்சித் தோல்வி கண்டார்.

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கள் தெரிவித்தன.

காணாமற்போனோருக்கான அலுவலகம் அமைப்பது தொடர்பான சட்டமூலம் கடந்த ஓகஸ்ட் மாதம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப் பட்டது. இருந்தும், இச்சட்ட மூலத்துக்கு ஜே.வி.பி. முன்வைத்த திருத்தம் உள்ளடக்கப் படவில்லை.

மேலும், இந்தச் சட்டமூலத்தில் கூறப்பட்ட விடயங்கள் அடிப்படையில் காணாமற் போனோர் விவகாரத்தைக் கையாள்வதாயின் இந்தச் சட்ட மூலத்துக்கு மேலும் சில திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்று திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டப்பட்டு வந்தது. ஆனால் அது இடம்பெறாமல் இழுபறிப் பட்டு வந்தது.

இறுதியாக ஜுன் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அந்த விடயம் விவாதிக்கப்பட்டுத் திருத்தங்களுடன் உரிய சட்டம் நிறைவேற்றப்படும் எனக் கூறப்பட்டது.

ஆனால், தென்னிலங்கையைத் தற்போது உலுப்பியுள்ள மழை, வெள்ளம், மண் சரிவு அனர்த்தங்களுக்கு மத்தியில் அப்பிரதேச எம்.பிக்கள் தத்தமது மக்களோடு இருக்கவேண்டிய சூழ்நிலை இது என்று சுட்டிக்காட்டப்படுவதால், நாளைய நாடாளுமன்ற அமர்வின்போது இந்த விடயத்தைக் கையாளாமல் ஒத்திப்போடுவது குறித்துக் கட்சித் தலைவர்கள் மட்டத்தில் ஆராயப்படுவதாகத் தெரிகின்றது.

இவ்விடயம் குறித்து இன்று முடிவு செய்யப்படும் என எதிர் பார்க்கப்படுகின்றது. (உ)

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 14 பாடசாலைகள் மற்றும் இடம்பெயர்ந்த அகதிகள் அதிக எண்ணிக்கையில் தங்கியிருக்கும் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் அனைத்தும் இன்று மீளத் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## சமூக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அறிக்கை ஒன்றில் இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

சமூக வலைத் தளங்கள் ஊடாக இன முறுகலை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் முழு முனைப்பாக இடம்பெற்று வருகின்றன என அது குறித்து ஆராய்ந்த குழுக்கள் தெரியப் படுத்தியுள்ளன.

அவ்விடயம் குறித்து விசேட கவனம் எடுத்து, சம்பந்தப்பட்டோர் தொடர்பில் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பொலிஸ் தலைமையகம் தயாராகி வருவதாகவும் தெரிவிக்கப் பட்டது.

அண்மையில் நாரம்மல பகுதி ஹோட்டல் ஒன்றில் வழங்கப்பட்ட உணவுப் பொதியில் கருத்தடைக்கான மருந்து இருந்ததாக சமூகவலைத்தளங்கள் ஊடாகச் செய்தி வெளியிடப் பட்டது.

இந்த விடயம் தொடர்பாகப் பொலிஸார் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அந்தச் செய்தி முற்றிலும் பொய்யானது எனத் தெரியவந்துள்ளது.

அதையடுத்து மேற்படி பொய்ப் பிரசாரத்தை மேற்கொண்ட நபர்களுக்கு எதிராகத் தற்போது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம)

## மனித உரிமைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ளது. இது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கடிதமொன்றையும் அனுப்பிவைத்துள்ளது.

முஸ்லிம்களையும் ஏனைய சிறுபான்மை மதங்களைச் சேர்ந்தவர்களையும் இலக்கு வைத்து, அவர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தூண்டுவோர் மற்றும் வன்முறைகள் சார்ந்த செயல்களில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணை நடத்தச் சட்டம், ஒழுங்கு அமைச்சர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் –

அண்மைக் காலங்களில் கடும் தீவிரமடைந்திருக்கும் முஸ்லிம்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் வன்முறைகள் மற்றும் ஆக்கிரமிப்புச் செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அக்கறை கொள்கின்றது.

இது போன்ற செயற்பாடுகள் காரணமாக 2014ஆம் ஆண்டு ஜுன் மாதம் அளுத்கமவில் வன்முறைகள் இடம்பெற்றன. இதனால் உயிரிழப்புகளும் சொத்து இழப்புகளும் ஏற்பட்டன. வன்முறைகளைத் தூண்டியவர்கள், இதற்குப் பொறுப்பானவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த இதுவரையில் ஆக்கபூர்வ நடவடிக்கைகள் எடுக்கப் படவில்லை என்பது புலனாகின்றது.

மேலும், கண்டிக்கப்படாமல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் பிற மதங்களுக்கு எதிரான சகிப்பற்ற தன்மை மற்றும் அண்மைக்காலத்தில் கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்கள் மீதான தொடர் தாக்குதல்கள் குறித்து ஆணைக்குழுவானது ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றது.

குறிப்பிட்ட ஓர் இனத்தை இலக்காக கொண்டு மேற்கொள்ளப்படும் வெறுப்பை வழங்கும் மற்றும் வன்முறைகள் போன்ற செயற்பாடுகள் 2007ஆம் ஆண்டு 56ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசன சட்டத்திலும் இலங்கை தண்டனை கோவை சட்டத்திலும் குற்றமாகும். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இந்நிலையில் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்வது அத்தியாவசியமானது.

சட்டப் புத்தகங்களில் காணப்படும் சட்டத்தை நடைமுறைப் படுத்தாவிட்டால், அத்தகைய செயற்பாடு சட்டத்தின் ஆட்சியின் மீது பாதகமான விளைவை ஏற்படுத்தும். எனவே நாட்டின் நலன் கருதி அந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவது அத்தியாவசியமாகும்.

எனவே, முஸ்லிம் மக்கள் மற்றும் ஏனைய சிறுபான்மை மக்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் பகைமை மற்றும் வன்முறைகளைத் தூண்டும் பேச்சுக்களை பிரசாரம் செய்வோர், வன்முறைகளில் ஈடுபடுவோர் மற்றும் அதனை ஊக்குவிக்கும் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் துரிதமாக மேற்கொள்ளுமாறு சட்டம் ஒழுங்கு அமைச்சருக்கும் பொலிஸ்மா அதிபதிக்கும் ஆணை பிறப்பிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கேட்டுக்கொள்கின்றது. - என இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவர் கலாநிதி என்.டி.உட கமவால் ஒப்பமிடப் பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (உ)

## தியாகி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சுற்றி வளைக்கப்பட்ட போது அத்தருணத்தில் 'சயனைட்' அருந்தி சாவைத் தழுவிக் கொண்ட முதற் தற்கொலையாளர் தியாகி பொன்.சிவகுமாரனின் நினைவு தினம் இன்றாகும்.

இன்று அவரின் சொந்த இடமான உரும்பிராயில் அவரின் சிலைக்கு முன்பாக வீரவணக்க நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

## தமிழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஈடுபடும் இந்திய மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப் படுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட 143 படகுகளை இலங்கைக் கடற்படையினர் கையகப்படுத்தி வைத்துள்ளனர்.

இப்படகுகளை விடுவிப்பதற்கு இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் எதிர்ப்புத் தெரிவித்துவந்த நிலையில், கடந்த மாதம் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கைக்குவருகை தந்ததையடுத்து, இந்தப் படகுகளை விடுவிப்பதில் கவனம் செலுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன் அடிப்படையிலேயே முதற்கட்டமாக ஒருதொகுதிப் படகுகளை விடுவிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது. (உ)

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) களினது கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகப் பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் போராட்டம் தொடர்பில் வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில் –

"வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளான நாங்கள் இன்று (நேற்று) 98ஆவது நாளாகவும் யாழ். மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக எமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

"இன்னும் இரண்டு நாள்களில் எமது போராட்டம் நூறாவது நாளை எட்டவுள்ளது. நாம் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றபோதும், இதுவரை மத்திய, மாகாண அரசாங்கங்களால் எங்களுக்குச் சாதகமான தீர்வு எதுவும் பெற்றுத் தரப்படவில்லை.

"நூறாவது நாளான நாளை செவ்வாய்க்கிழமை வடமாகாணத்திலுள்ள அனைத்து வேலையற்றபட்டதாரிகளையும் இணைத்து யாழ். மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக மாபெரும் போராட்டமொன்றை மேற்கொள்ளவுள்ளோம்.

"போராட்டத்தின் இறுதியில் அனைத்துப் பட்டதாரிகளின் விவரங்களும் சேகரிக்கப்பட்டு வடமாகாண முதலமைச்சர், வடமாகாண ஆளுநர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோரிடம் கோரிக்கைகள் அடங்கிய மகஜர்கள் கையளிக்கப் படவுள்ளன.

"ஆகவே, இந்த மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் வடமாகாணத்திலுள்ள அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் தவறாது கலந்து கொண்டு போராட்டத்திற்கு வலுச்சேர்க்குமாறு கோருகின்றோம்". - என்றார். (உ)

# மாணவர்களுக்கு சரீர ரீதியில் தண்டனை வழங்கவே கூடாது!

## இப்படிச் சொல்கிறார் வடக்கு கல்வி அமைச்சர்

வவுனியா, ஜுன் 05

மாணவர்களுக்கு சரீர ரீதியில் தண்டனை வழங்கக்கூடாது என வட மாகாண சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜா தெரிவித்தார்.

இந்தத் தீர்மானத்தை வடக்கில் உள்ள 14 ஆயிரம் ஆசிரியர்களும் ஏற்று கையொப்பம் இட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

வவுனியா - கனராயன்குளத்தைச் சேர்ந்த தர்மராசா ஜனார்த்தனன் (வயது 17) என்ற மாணவன் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே வடக்கு கல்வி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மாணவனின் மரணம் தொடர்பில் சுட்டிக்காட்டப்படும் ஆசிரியர் மீது துறைசார் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் குருகுலராஜா தெரிவித்தார். (ம)

## மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வியை வழங்குவதற்கு நடவடிக்கைமேற்கொள்ளப்படும் என அறிக்கை யொன்றில் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனம், தேசிய மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் ஆகியன இணைந்து பாதிக்கப்பட்டுள்ள மூன்று லட்சத்து 74 ஆயிரம் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதே இதன் நோக்கமாகும். காலி, கம்பஹா, அம்பாந்தோட்டை, களுத்துறை, கேகாலை, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த அமைப்புக்கள் மூலம் நிவாரண உதவிகள் வழங்கப்படவுள்ளன. இதுவரையில் 19 நாடுகளில் பொருள்கள், விசேட நிதி முதலானவை அவசர நிவாரண உதவியாக கிடைக்கப் பெற்றுள்ளமையுடன், சுகாதார வசதிக்கு தேவையானவற்றை வழங்குவதற்கு விசேட நிதி செலவிடப்படவுள்ளது என உணா மெக் கௌலி மேலும் தெரிவித்துள்ளார்.

## சு.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இதுவரை அந்தச் சந்திப்பு இறுதிப்படுத்தப்படவில்லை என வட மாகாண சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் ஆங்கில ஊடகமொன்றுக்குக் கூறியுள்ளார்.

தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைக்குத் தீர்வை வழங்கும் வகையில், அரசமைப்பை உருவாக்குவதாக அரசால் உறுதியளிக்கப்பட்ட போதிலும் அதன் தயாரிப்புப் பணிகள் தாமதப்படுத்தப்படுகின்றமை குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வழங்கப்படாமை குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் எடுத்துக்கூறியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இந்த விடயத்தில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்குமாறும் வலியுறுத்தியிருந்தது.

தற்போதுள்ள அரசமைப்பிற்குப் பதிலாக புதிய அரசமைப்பைக் கொண்டுவருவதற்கு கூட்டு எதிரணியில் இருக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

எனினும், புதிய அரசமைப்பின் ஊடாகவே தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் வலியுறுத்திவருகின்றது. (உ)

## இன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சட்ட நடவடிக்கை எடுப்பதிலும் பொலிஸ் திணைக்களம் தீர்க்கமாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், ஒரு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் ஏற்படும் அசம்பாவிதங்கள் தொடர்பில் அப்பிரதேசப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியே பொறுப்பு கூறும் முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

தமது எல்லைக் குட்பட்ட பகுதிகளில் இனங்களுக்கு இடையில் பேதங்களை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெற்றால் அந்தந்தப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளே அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும் என பொலிஸ் மா அதிபரால் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதுபோன்ற நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக அனைத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள், பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரிகள் மற்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் மிகவும் அர்ப்பணிப்பு மற்றும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்து பொலிஸ்மா அதிபரால், பொலிஸ் நிலையங்களுக்குச் சுற்றறிக்கை ஒன்றும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## ஜி.எஸ்.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ளர் மல்ட்ஸ்ரோம் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையின் நிலைமை குறித்து மூன்று மட்டங்களில் மதிப்பீடு செய்யப் படும் என்றார் அவர்.

27 சர்வதேச பட்டயங்களைத் தனது நாட்டில் நடைமுறைப் படுத்தும் செயற்பாடு குறித்து எழுத்து மூலம் கேட்டறியப் படும்.

சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் மற்றும் பிறகண்காணிப்பு அமைப்புக்கள், தொழிற்சங்க நிறுவனங்கள், அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் போன்றவை மூலம் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.

ஜனநாயக நிலைமை, நல்லாட்சி, மனித உரிமைகள் நிலைவரம் ஆகியவை குறித்துச் செயற்பாட்டுக் குழுக்கள் மூலம் தகவல் திரட்டப்படும்.

இவை மூலம் தயாரிக்கப்படும் மதிப்பீட்டு அறிக்கை இவ்வருட இறுதியில் நடைபெறும் ஐரோப்பிய நாடாளுமன்றம் மற்றும் கவுன்ஸிலின் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும். அப்போது நிலைமை மீளாய்வு செய்யப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும். - என்றும் அங்கு குறிப்பிட்டார் ஆணையாளர். (உ)

## வேகமாகப் பரவுகிறது டெங்குநோய்!

நாட்டில் டெங்கு நோய் வேகமாகப் பரவி வருவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2016 ஆம் ஆண்டில் டெங்கு நோயாளர்கள் 55 ஆயிரத்து 150 பேரே நாட்டில் இனங்காணப்பட்டுள்ளனர்.

எனினும், 2017 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 56 ஆயிரத்து 887 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த மே மாதத்தில் டெங்கு நோயாளர்கள் 12 ஆயிரத்து 212 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை டெங்கு நோய்த் தாக்கம் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகரித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் மட்டும் இவ்வாண்டில் 12 ஆயிரத்து 610 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த மே மாதத்தில் மாத்திரம் 2 ஆயிரத்து 994 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

# நல்லிணக்கத்தை வலுப்படுத்த அர்ப்பணிப்புடன் உள்ளேன்!

## ஜனாதிபதி திடசங்கற்பம்



கொழும்பு, ஜூன் 05

இலங்கையின் தீவிரவாதம் வளர்வதற்கு இடமளிக்காது, போர் அற்ற நாட்டைக்கட்டியெழுப்பி நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குத் தாம் அர்ப்பணிப்புடன் இருக்கின்றார் என ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஒற்றுமை மற்றும் சமாதானத்தை ஏற்படுத்தி சமூகத்தில் நல்லிணக்கத்தை வலுப்படுத்த இந்த அரசு உறுதி பூண்டுள்ளது என்றும் அவர்மேலும்குறிப்பிட்டார்.

அரந்தலாவ சர்வதேச பௌத்த நிலையத்தில் நடைபெற்ற அரந்தலாவ பிக்குகள் படுகொலையின் 30 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வண. நேஹொட இந்தசார தேரர் உள்ளிட்ட தேரர்களின் நினைவாக இடம்பெற்ற நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அனைத்து இன, மத பேத மக்களிடையே நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பி, நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அரசு முன்னெடுக்கும் செயற்திட்டங்களுடன் இணைய வேண்டியது அனைவரதும் பொறுப்பு.

பிற்போக்குவாதம் மற்றும் அதிகார ஆசையை முடிவுறுத்தி தாய்நாட்டின் எதிர்காலத்துக்காக சகோதரத்துவத்துடன் அணி திரளவேண்டியது அனைவரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ள காலத்தின் கட்டாய பணியாகும்.

கடந்த மூன்று சகாப்த காலமாக கோரமான யுத்தம் இடம்பெற்றது. எனினும் மீண்டுமோர் யுத்தம் இடம் பெறுவதற்கு இந்த அரசு இடமளிக்காது. பேரழிவுகளைத் தடுக்கும் நடவடிக்கைகளில் இந்த அரசு ஈடுபட்டுள்ளது. -என்றார்.

1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2 ஆம் திகதி, அம்பாறை வித்யானந்த பிரிவெனாவைச் சேர்ந்த வண. நேஹொட இந்தசார தேரர் உள்ளிட்ட 31 தேரர்களும் நிராயுதபாணிகளான அப்பாவி மக்கள் மூவரும், வெட்டிக் கொலை செய்யப்பட்டப்பட்டனர்.

வண. நேஹொட இந்தசார தேரரின் மத, சமூக செயற்பாடுகளைப் பாராட்டிய ஜனாதிபதி, அவரது உருவச்சிலைக்கு மலரஞ்சலி செலுத்தியமையுடன், பௌத்த நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்ட நினைவுமண்டபத்தையும் திறந்து வைத்தார்.

வண. உருலேவத்த ஸ்ரீ தம்மரக்கித்த தேரர், வண. கிரிந்திவெல சோமரத்ன தேரர் உள்ளிட்ட தேரர்களும், அமைச்சர்களான தயாகமகே, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, பிரதி அமைச்சர்களான லசந்த அழகியவண்ண, அனோமா கமகே, முன்னாள் அமைச்சர் பீ. தயாரத்ன உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (எ)

# அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிப்பால் புதிய நீர்த்தேக்கங்கள் உருவாகும் நிலை

## சுற்றுச்சூழல் ஆய்வாளர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 05

அதிவேக நெடுஞ்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டமையால் மழை காலங்களில் நாட்டின் மத்தியில் புதிய நீர்த்தேக்கங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று இயற்கை மையத்தின் தேசிய அமைப்பு சுற்றுச்சூழல் ஆய்வாளர் ரவிந்திர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் நிர்மாணிக்கப்படவுள்ள நெடுஞ்சாலைகள் காரணமாக பெரிய ஆபத்து ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகளை நிர்மாணிப்பதற்காக மண் நிறைத்து அதற்கு மேல் நிர்மாணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது.

அதிவேக நெடுஞ்சாலைகளுக்கு மண் நிறைத்து நிர்மாணித்தால் நாடு முழுவதும் உள்ள 103 கங்கைகள் மற்றும் 206 பள்ளத்தாக்குகள் என்பனவற்றுக்குத் தடை ஏற்படும் ஆபத்துக்கள் உள்ளன.

எதிர்வரும் காலங்களில் நிர்மாணிக்கப்படவுள்ள அதிவேக நெடுஞ்சாலைகள் தரத்துடன் நிர்மாணிக்கப்படவேண்டும்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை காரணமாக தேங்கும் நீரைச் சேகரித்து கடலுக்கு அனுப்புவதற்காக மாற்று நடவடிக்கை ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.- என்றார். (எ)

# தற்போதைய அரசு நாட்டை முன்னோக்கி நகர்த்தாது!

## குற்றம் சாட்டுகிறார் விமல்



தற்போதைய அரசு நாட்டை முன்னோக்கி நகர்த்தப் போவதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ குற்றம்சுமத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2016 ஆம் ஆண்டு நிதி அமைச்சின் ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் திருப்தி கொள்ள முடியாது என்று கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார். கடந்த அரசின் மீது குற்றம் சுமத்தி தற்போதைய அரசு இரண்டு ஆண்டுகளில் பெரியளவில் கடனைப் பெற்றுக் கொண்டுள்ளது எனஅவர்தெரிவித்துள்ளார்.

அரசு பொய்யான தகவல்களை வெளியிடுவதால் எதிர்காலத்தில் எமக்கு வெளிநாடுகள் உதவிகளை வழங்கா. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முடியாத அரசு ஒன்றே இன்று நாட்டை ஆட்சி செய்து வருகின்றது. -என்றார். (எ)

# இலங்கையில் 2 டொப்ளர் ராடர்கள் விரைவில் பொருத்தவுள்ளது ஜப்பான்!

கொழும்பு, ஜூன் 05

மோசமான வானிலை தொடர்பானதகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இலங்கையில் இரண்டு டொப்ளர் ராடர்களை ஜப்பான் பொருத்தவுள்ளது.

ஜப்பான் அன்பளிப்பாக வழங்கவுள்ள இந்த இரண்டு ராடர்களும், இலங்கையின் கிழக்குப் பக்கத்தில் பொத்துவிலிலும், மேற்குப் புறமாக கற்பிட்டியிலும் பொருத்தப்படும் என்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலர் மீயான்வல தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த ராடர்களைப் பராமரிப்பது உள்ளிட்ட நிபுணத்துவ சேவைகளையும் ஜப்பான் வழங்கவுள்ளது.

இது தொடர்பான உடன்பாடு இரண்டு நாடுகளுக்கும் இடையில் அடுத்த சில நாள்களில் கையெழுத்திடப்படும்.

ஏற்கனவே அமெரிக்காவால் வழங்கப்பட்ட டொப்ளர் ராடர் தொகுதி பழுதடைந்து விட்டது.

எனவே, பழுதுபார்ப்பதற்காக அது அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. - என்றார்.

இந்த டொப்ளர் ராடர் முன்னர் இலங்கையின் மிக உயர்ந்த மலையான பீதுருதாலகாலவின் உச்சியில் நிறுவப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# மறுசீரமைப்புப் பணியில் அமெ.படையினர்



நாட்டில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண் சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு நடவடிக்கையில் அமெரிக்கப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

தென் மாகாணம் உட்பட 12 மாவட்டங்கள் வெள்ளத்தால் மூழ்கியமையுடன், மண் சரிவினால் பலர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இதுவரை 224 பேர் உயிரிழந்துள்ளனர், பலர் காணாமற் போயுள்ளனர். ஏழு லட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சர்வதேச நாடுகள் அனைத்தும் இந்த அனர்த்தத்தில் இருந்து மீள்வதற்காக பல்வேறு உதவிகளை வழங்கிவருகிறது.

சீனா, ஜப்பான், அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலிய போன்ற பல்வேறு நாடுகள் தங்கள் அவசர உதவியை வழங்கியுள்ளன.

களுத்துறை மாவட்டத்தில் வெள்ளத்தால் சேதமடைந்துள்ள பாடசாலைகளை மறு சீரமைப்பதில் அமெரிக்கப் படையினரும், இராணுவ பொறியியலாளர்களும் ஈடுபட்டுள்ளனர். (எ)

# நாளை மின் தடை

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்புவேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை-,

காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ் பிரதேசத்தில் மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, கொடுக்குழாய், ஆழியவளை, வெற்றிலைக் கேணி, கட்டைக்காடு, கேவில், வெற்றிலைக்கேணி இராணுவ முகாம், கட்டைக்காடு இராணுவமுகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் தேக்கவத்தைப் பிரதேசம் ஆகிய இடத்திலும் மன்னார் பிரதேசத்தில் முருங்கன், முசலிப் பிரதேசம், பரிகாரிக்கண்டல், பூந்தீவுக்கண்டல், மடுக்கரை, புதுக்காமம், மருதமடு, பொன்னச்சிக்குளம், மணற்குளம், மேதாவெளி, பொற்கேணி, கொக்குப்படையான், தம்பட்டமுசலி, மறிச்சுக் கட்டி, கூளாங்குளம், புதுவெளி, அரிப்பு நீர்ப்பாசனசபை, சிலாவத்துறை, CECB, முள்ளிக்குளம் கடற்படை முகாம், சிலாவத்துறை கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (இ)

# செய்தி ஊடகச் சட்ட வரைவு தயாரிப்புக்குக் கருத்துத் திரட்டல்

செய்தி ஊடகங்கள் தரநிர்ணயம் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள சுயாதீனப் பேரவைக்கான வரைவு சட்டத்தை உருவாக்குவது தொடர்பாக வடக்கின் கருத்தைப் பெற்றுக் கொள்ளும் நிகழ்வு எதிர்வரும் 8ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தினில் நடைபெறவுள்ளது.

இலங்கை அரசு செய்தி ஊடகங்களுக்கான சட்டமொன்றை நடைமுறைப்படுத்த முற்பட்டுள்ள நிலையில், யாழ். ஊடக அமையத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் இக்கருத்துக் கேட்கும் அமர்வை ஊடக மறுசீரமைப்பிற்கான செயலகம் மற்றும் யாழ்.பல்கலைக்கழக ஊடக கற்கைகள் பிரிவு ஆகியன இணைந்து முன்னெடுக்கின்றன.

ஊடகங்கள் மற்றும் பெறுநர்களுக்கான உரிமைகள் தொடர்பிலான இக்கருத்து கேட்கும் அமர்வில் ஊடகவியலாளர்கள், ஊடக நிறுவனங்கள், ஊடக அமைப்புக்களது பிரதிநிதிகள், அரசியல் கட்சிகள், அவற்றின் தலைவர்கள்,பொது அமைப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புக்களைச் சேர்ந்தோர் பங்கெடுத்து கருத்துக்களை வெளிப்படுத்த முடியும்.

யாழ்.நகரின் றில்கோ விடுதியினில் எதிர்வரும் 8ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள இக்கருத்து கேட்கும் நிகழ்வினில் அனைவரையும் பங்கெடுக்குமாறு பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே தென்னிலங்கையின் மாகாண ரீதியாக கருத்துக்கேட்கும் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் தமிழ்த் தரப்புக்களது கருத்தைப் பெற்றுக்கொள்ளும் முதலாவது அமர்வாக இது அமைந்துள்ளது. (உ)

# முல்லைப் படைத் தளத்தை ஊடறுத்துப் புதிதாக வீதி

முல்லைத்தீவு, ஜூன் 05

முல்லைத்தீவு பாதுகாப்புப் படைகளின் தலைமையக முகாமை ஊடறுத்து நந்திக் கடல் வரை புதிய வீதியை நிர்மாணிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த வீதி நிர்மாணிக்கப்படுவதன் காரணமாகப் பாதுகாப்புப் படைகளின் தலைமையக முகாம் இரண்டு பகுதிகளாகப் பிரியும்.

ஏற்கனவே முகாம் அமைந்துள்ள பகுதியில் வீதியின் ஒரு பகுதி நிர்மாணிக்கப்பட்டு செப்பனிடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நந்திக்கடல் செல்ல முல்லைத்தீவு நகரில் இருந்தும் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இருந்தும் இரண்டு நவீன வீதிகள் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், மிகவும் ஆரம்ப மட்டத்தில் இருக்கும் சிறிய வீதி விரிவுபடுத்தப்பட்டு புதிய வீதி நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

புதிய வீதி நிர்மாணிக்கப்பட்ட பின்னர், இரண்டாகப் பிரியும் முகாமின் ஒரு பகுதியைப் பொது மக்களுக்குப் பகிர்ந்தளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு 22.5 மெற்றிக்தொன் பருப்பு

இலங்கையில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென உலக சுகாதார நிறுவனம் 22.5 மெற்றிக் தொன் பருப்பு வழங்கியுள்ளது.

உலக சுகாதார நிறுவனத்தின் வதிவிட பிரதிநிதி பிரிண்டா பார்டன் அனர்த்த முகமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவிடம் பருப்பைக் கையளித்தார். அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் வைத்து அந்தப் பருப்பு கையளிக்கப்பட்டது. (ம)

## ஒலிம்பிக் பதக்கத்தை ஏலத்தில் விட சுசந்திகா முடிவு



ஒலிம்பிக்கில் குறுந்தூர ஓட்டப் போட்டியில் பெற்ற வெள்ளிப் பதக்கத்தை சுசந்திகா ஜெயசிங்க ஏலத்தில் விடவுள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

தான் எதிர்நோக்கியுள்ள கடும் பொருளாதார நெருக்கடியே இதற்குக் காரணம் என அவர் கூறியுள்ளார். 2000 ஆம் ஆண்டு சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் 200 மீட்டர் ஓட்டத்தில் இரண்டாமிடம் பெற்று வெள்ளிப் பதக்கத்தை சுசந்திகா வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.




# கதிர்காமம் முருகன் ஆலய மதகுரு நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை

## ஆலய வழிபாட்டுடன் கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டார்

(எஸ்.நிதர்ஷன்)



கதிர்காமம் முருகன் ஆலயத்தின் தலைமை மதகுரு பஸநாயக்க நிலமே நேற்று யாழ். குடாநாட்டுக்கு விஜயம் மேற்கொண்டு இங்குள்ள இந்து மதத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்.குடாநாட்டிலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களுக்கும் சென்று வழிபாடுகளை மேற்கொண்டார்.

பஸநாயக்க நிலமே குறிப்பாக, நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம், தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் ஆகியவற்றுக்குச் சென்று வழிபட்டார்.

நல்லூர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத் தலைவர் ஆறு. திருமுகன் ஆகியோரையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்து மதத் தலைவர்களுடனான சந்திப்பின்போது, யாழ். மாவட்டத்திலிருந்து கதிர்காமத்திற்குவரும்யாத்திரிகர்களின்எண்ணிக்கை மிகக்குறைவடைந்துள்ளமைக்கான காரணம் என்ன என பஸநாயக்க நிலமே கேள்வி எழுப்பியிருந்தார்.

அவரது இந்தக் கேள்விக்கு பதிலளித்த ஆறு.திருமுருகன், "கதிர்காமத்தில் உள்ள தமிழ் அடையாளங்கள் மாற்றப்பட்டுள்ளமையால் யாத்திரிகர்கள் விசனம் அடைந்துள்ளனர்" எனக் கூறினார்.

அங்கு தமிழ் மொழியில் எந்த அறிவிப்புக்களும் இல்லை. தமிழ் யாத்திரிகர்கள் தங்குவதற்கு இடம் இல்லை. இருக்கின்ற இடங்களை சிங்கள பக்தர்கள் எடுத்துக்கொள்கின்றனர்.

மேலும், மலையேறும் தமிழ் யாத்திரிகர்களிடம் வாகனச் சாரதிகள் கட்டுப்பாடற்ற வகையில் அதிக கட்டணங்களை அறவிடுகின்றனர். இதுபோன்ற பல காரணங்களால் யாழ். குடாநாட்டில்இருந்துபக்தர்கள்அங்குசெல்வது குறைந்துள்ளது என்றார்.

இதற்கு பதிலளித்த பஸநாயக்க நிலமே, இந்தப் பிரச்சினைகளுக்கு கதிர்காமம் முருகன் ஆலய நிர்வாகம் மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து மதத் தலைவர்கள் உள்ளிட்ட இருதரப்புக்கலந்துரையாடல்கள் மூலம்தீர்வுகாணமுடியும்என்றார்.

மேலும், கதிர்காம முருகன் ஆலய வளாகத்தில் தற்போது கட்டப்பட்டு முடிவுறும் தறுவாயில் உள்ள 125 அறைகள் கொண்ட கட்டடத்தை அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு வழங்கத்தாங்கள்தயாராகஉள்ளனர் எனவும் அவர் கூறினார்.

அத்துடன், யாழ்ப்பாணத்திலிருந்து அதிகளவு யாத்திரிகர்கள் கதிர்காமத்திற்கு வருவதற்கான ஒழுங்குகளை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து மதத் தலைவர்களும், கதிர்காமம் முருகன் ஆலயமும் இணைந்து மேற்கொள்ளலாம். - எனவும் நேற்றைய சந்திப்பில் கூறப்பட்டது. (ம)

# நடேசன் கொலை குறித்து விசாரணை நடத்துமாறு கோரி கிழக்கில் கவனவீர்ப்பு



ஊடகவியலாளர் ஐ.நடேசனின் படுகொலை தொடர்பில் இதுவரையில் முறையான விசாரணைகள் ஆரம்பிக்கப்படாதமையைக் கண்டித்து மட்டக்களப்பு நகரில் கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி கவனவீர்ப்பு போராட்டம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 4 மணியளவில் காந்தி பூங்கா முன்பாக இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் சிரேஷ்ட ஊடகவியலாளரான ஐயாத்துரை நடேசன் சுட்டுக் கொல்லப்பட்டு 13 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் இதுவரையில் முறையான விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இதனை மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வன்மையாக கண்டிப்பதை வெளிப்படுத்தியும், உடனடியாக விசேட பொலிஸ் குழு வொன்றை அமைத்து விசாரணையைத் துரிதமாக முன்னெடுக்குமாறு வலியுறுத்தியும் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்தில் பிரதேச அரசியல்வாதிகள், ஊடக வியலாளர்கள்,பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல 401 மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931362
follow us : cnrworldwideexpress

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.06.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.